விலை : ரூ 5.00

# இந்து கலாசாரம்


இந்து சமய திங்கள் வெளியீடு

மலர் : 3 ★ திருவள்ளுவர் ஆண்டு 2022 ஐப்பசித் திங்கள் முதலாம் நாள் (29-10-1991) ★ இதழ் : 2

## "கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"

T. Kanagarathnam,
B.A.(Lond.) Dip-in-Ed.(Cey) F.I.
Consultant and Editor - L.P.
Lecturer; SLIDA and BCIS
COLOMBO — SRI LANKA.

கொழும்புத் தமிழ்ச் சங்கம்
நூலகம்



கொழும்பு கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்ரமணிய சுவாமி கோவிலில் நிறைவுகாண இருக்கும் இராஜகோபுரமும் இருமருங்கு மணிக்கோபுரங்களினதும் அழகிய தோற்றம்.

(கோபுர விபரம் 21ம் பக்கம்)

## இந்து கலாசாரம்

இந்து சமய திங்கள் வெளியீடு

ஆலோசகர்கள் :

குரு மகா சன்னிதானம்
நல்லூர் ஆதீனம்

ஸ்ரீ சுவாமி ஆத்மகனானந்தா
இராமகிருஷ்ண மிஷன்
வெள்ளவத்தை

சுவாமி ஜெகதீஸ்வரானந்தா
சிவயோக சமாஜம்
திருகோணமலை

காயத்திரி சித்தர்
டாக்டர் ஆர். கே. முருகேசு சுவாமி
இலங்காதீஸ்வரர் ஆலயம்
நுவரேலியா

ஆசிரியர் குழு :

திரு. ஆர். வைத்தமாநிதி
(கௌரவ ஆசிரியர்)

திரு. ஏ. எம். துரைசாமி
(பிரதம நிருவாக ஆசிரியர்)

திரு. நா. ஹரிதாஸ்
(பதிப்பாசிரியர்)

திரு. சங்கரன் புதல்வன்
(செய்தி ஆசிரியர்)

திருமதி சுபாஷினி சுதந்திரராஜன்
(உதவி ஆசிரியர் மகளிர் பகுதி)

சந்தா விபரம் :

| | | |
|---|---|---|
| தனிப் பிரதி | ரூ. | 5.00 |
| ஆண்டுச் சந்தா | ரூ. | 75.00 |
| ஆயுள் சந்தா | ரூ. | 1000.00 |

வெளியிடுபவர் :

இந்து கலாசார மன்றம்
39/23, நெல்சன் ஒழுங்கை
கொழும்பு-3


# மறைவாக நமக்குள்ளே

—நாதன்

நவராத்திரிக்கு விடை கொடுத்துவிட்டு, தீபாவளிக்கு முகமன் கூறினோம். எமக்கு பண்டிகைகள் அடுத்தடுத்து வந்துவிடுகின்றன. ஒன்றுவந்து ஓயுமுன் அடுத்த பண்டிகை வாசற்கதவைத் தட்டுகின்றது.

வரும் பண்டிகை வெறுமனே வராமல் ஆயிரம் புராணக் கதைகளை உள்ளருத்தமாக்கிக்கொண்டு வருகின்றது. புராணக்கதை நடந்ததா என்பது நம் யாருக்குமே தெரியாது! அதன் உன்மை, பொய்ம்மை பற்றியும் நாம் அவ்வளவாக அலட்டிக் கொள்வதில்லை. ஆனாலும் கொண்டாடுகின்றோம்.

விருப்பத்தோடுதான் கொண்டாடுகின்றோம் என்று கூறிவிடுவதற்கில்லை. உலகத்தோடு ஒட்டி வாழ வேண்டுமே என்ற நிர்ப்பந்தம். மறுபுறம் போலியோ, நியாயமோ அது ஒரு கௌரவப் பிரச்சனை

சமய ரீதியாக எல்லோரும் மகிழுகின்ற நாள். புத்தாடை அணிந்து, பட்சணங்கள் செய்து, வெடிகள் கொளுத்தி, அயலவர், உறவினர் கூடிமகிழ்ந்து பொழுது முழுதும் இன்பமயமாகக் கழிகின்ற நாம் களிக்கின்ற நாள்.

ஆனால் பண்டிகை வெறுமனே வந்து போய் விடவில்லையே! பொருளாதாரப் பிரச்சனையையும் அழைத்துக்கொண்டுதானே வருகிறது கொண்டாட வேண்டும் என்பதற்காக கடன்களை பட்டு, பின் அந்தக் கடன்களை உரிய காலத்திற் செலுத்த முடியாமல் துன்பப்பட்டு......!

ஒரு நாள் மகிழ்வுக்காக, பல தினங்கள் கடன் பட்டு துன்பப்படுவதில் நியாயமிருக்கிறதா? இந்தக் கடனை கொடுத்து முடிப்பதற்குள், அடுத்த பண்டிகை கதவைத் தட்டிவிடுமே!

பெரியவர்கள் மகிழாவிட்டாலும் குழந்தைகள் மகிழவேண்டும். எனவே புத்தாடை, வெடிகள் என்பன கட்டாயமாகி விடுகின்றன.

எனவே, 'பண்டிகை' என்றதுமே இனிமேல் இல்லாதவர்களைப் பற்றி எண்ணிப் பார்ப்போம். உள்ளவர்களின் ஆடம்பரம், இல்லாதோர் மனங்களை உறுத்துமே என எண்ணிப் பார்ப்போம். பட்சணங்களை மட்டுமல்ல, கொண்டாடவே வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்படுகின்ற "இன்மை"கள் நிறைந்தோரின் துன்பங்களையும் பகிர்ந்துகொள்வோம் - அர்த்தபுஷ்டியோடு!

அத்துடன் **பண்டிகை** என்றதுமே **பிறர்நலம் கருதல்** என்று ஒரு புது விளக்கம் கொடுத்துப் பார்ப்போமா?

# நமது நோக்கு

ஒரு பாடசாலையின் சகல மாணவர்க்கும் தங்கள், தங்கள் சமயத்தினூடாக ஆன்மீகத் துறையினை வளர்ப்பதற்கும் அதில் பயன் பெறுவதற்கும் அனுமதிக்கப்பட்டுள்ளதென்பது யாவரும் அறிந்த உண்மை.

இப்படி ஒரு அறிவான நிலையில், கொள்ளுப்பிட்டி மெதடிஸ்ட் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இந்து மாணவர்க்கு ஏற்பட்டு வரும் சோதனைகளும், இந்து ஆசிரியர்க்கு ஏற்பட்டு வரும் வேதனைகளும் ஒரு துயரத்திற்குரிய அம்சமாகத் தெரிகிறது.

இந்து மாணவர்களே பெரும்பான்மையாகக் கல்வி கற்கும் இப்பாடசாலையின் இந்து கலாசார முத்தமிழ் மன்றம் தரும் தகவல்கள் எம்மைத் திடுக்கிட வைக்கின்றன.

அப்பாடசாலையின் புதிய அதிபரானவர் குறிப்பிட்ட முத்தமிழ் மன்றத்துக்கும், இந்து மாணவர்க்கும் ஏற்படுத்தும் தடைகளும் சிக்கல்களும் இந்து உலகத்தின் கண்களில் மண்ணை வீசுவதுபோல அமைந்திருக்கின்றன.

முத்தமிழ் மன்றத்தினர் குறிப்பிட்ட புதிய அதிபர் மேல் கூறும் குறைகள் ஆழ்ந்து பரிசீலிக்கக் கூடியவை அதாவது, புதிய அதிபரினால் போடப்பட்ட முட்டுக்கட்டைகள் பல.

அ. இந்து மாணவர்களைத் தேவாரம் பாடவிடாமல தடுத்தது.

ஆ. மதமாற்றம் சம்பந்தப்பட்ட செயல்களில் தீவிரமாக ஈடுபடுவது.

இ. பலாத்காரமாக இந்து மாணவர்களை விவிலிய நூல்கள் வாசிக்கச் செய்தது.

ஈ. கலைமகள் விழா, குருபூஜைகள், ஏனைய இந்து சமய நெறிகள் போன்றவற்றுக்குத் தடைவிதித்தது.

உ. இந்து கலாசாரம் சம்பந்தமான ஏனைய நிகழ்ச்சிகள் நடத்த அனுமதி மறுத்தது.

ஊ. பாடசாலைக்கு வெளியில் உள்ள சங்கத்துக்கு மட்டும விழா நடத்த அனுமதி தருவது.

எ. உத்தியோக பூர்வமான பெற்றோர் ஆசிரிய சங்கக் கூட்டம் நடத்தத் தவறியது.

ஏ. விவேகானந்த சபை சமய பரீட்சைக்கு விண்ணப்பித்த பிள்ளைகட்கு பாடசாலை விலகல் பத்திரம் தருவதாக அச்சுறுத்தியது.

ஒ. ஞாயிறு அறநெறிப் பாடசாலையில் பிரச்சினைகளை உண்டு பண்ணியது.

இப்படியான குற்றச்சாட்டுகளைக் கொண்ட ஆற்றாமை மிகுந்த விண்ணப்பங்கள் பெற்றோர்களின் மனதிலும் அச்சத்தை உண்டுபண்ணியது. இதன்படி, புதிய அதிபரை இடமாற்றம் செய்வதே நியாயமானது என்று முத்தமிழ் மன்றம் பாடசாலை நிர்வாகப் பணிப்பாளரையும், கௌரவ இந்து கலாசார அமைச்சரையும், அரசையும் கேட்டுக் கொள்கிறது. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலிருந்து விவேகானந்தா மேட்டுத்தெரு வரைக்கும் வேறு இந்துப் பாடசாலை இல்லாத காரணத்தால், இப்பாடசாலை இந்து மக்களுக்கு ஒரு முக்கிய அறிவு மையமாக அமைந்துள்ளது.

ஆகையினால் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது சம்பந்தப்பட்ட விடயத்தில் உடனடி நடவடிக்கை எடுத்து இந்து மக்களினதும், மாணவரினதும், ஆசிரியரினதும் மனப் புண்களைத் தீர்த்து வைப்பார்கள் என்று ஆழமாக எதிர்பார்க்கின்றோம்.

## ஒரு விளக்கம்

கொழும்பு இந்து கலாசார மன்றம் 1981ம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டு கடந்த 10 வருடங்களாக செயல்பட்டு வருகின்ற ஒரு பெரிய மன்றம். மன்றத்தின் நிதி இந்தியன் ஓவர்சீஸ் வங்கி நடைமுறைக் கணக்கில் உள்ளது. அரசாங்கத்திலும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இம்மன்றத்தின் கிளை இங்கிலாந்திலும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இந்து கலாசாரம் என்ற புகழ் பெற்ற இந்து சமய இதழை ஆரம்பித்து இலங்கை முழுவதும் இந்து சமயப் பிரசாரம் செய்கிறது. இலண்டனிலும் சமயப் பிரசாரம் செய்கிறது.

இப்போது, "இந்து கலாசார முன்னேற்ற மன்றம்" என்று ஒரு சிலர் ஒரு மன்றத்தை வைத்துக் கொண்டு சில விரும்பத்தகாத காரியங்களை செய்து வருவதாகவும், இந்து கலாசார மன்றமும் "இந்து கலாசார முன்னேற்ற" மன்றமும் ஒன்றுதான் என்று விபரமறியாதோர் சிலர் நினைத்துக் கொண்டிருப்பதாகவும் இதற்கு தகுந்த விளக்கம் கொடுக்க வேண்டுமென்றுபலர் நமக்கு கடிதம் எழுதியுள்ளனர்.

"இந்து கலாசார முன்னேற்ற" மன்றத்தைப் பற்றி நாம் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. இவர்களின் பூர்வோத்திரம், எதற்காக இந்த மன்றத்தை நடத்துகின்றனர் என்பது எமக்குத் தொடர்பில்லாத விடயம். ஆனால் நாம ஒன்று மட்டும் சொல்ல விரும்புகிறோம். இந்து கலாசார மன்றத்திற்கும், இந்து கலாசார முன்னேற்ற மன்றத்திற்கும் எவ்வித தொடர்புமில்லை, உறவுமில்லை என்பதை இந்துப் பொது மக்கள் தெரிந்துகொள்ள வேண்டுமென தயவாய்க் கேட்டுக் கொள்கிறோம்.

இந்து கலாசார மன்றம்
கொள்ளுப்பிட்டி

# 'இந்து அதிபர் வேண்டும்'

## மே. த. ஜனாதிபதிக்கு இந்து அறநெறிப் பாடசாலை முறையீடு

மாண்புமிகு ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாஸா அவர்கள்,
இலங்கை ஜனநாயக சோஸலிஸ குடிஅரசு,
ஜனாதிபதி செயலகம்,
கொழும்பு 1.

மேன்மை தங்கிய ஜனாதிபதி அவர்களுக்கு,

தங்கள் மேலான கவனத்துக்கு பின்வரும் முறைப்பாட்டை சமர்ப்பிக்க விரும்புகிறோம:

கொள்ளுப்பிட்டி மெதடிஸ்த அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் (59, ஹட்சன் வீதி கொழும்பு-3) கடந்த ஆறு வருடங்களாக ஞாயிறு இந்து அறநெறிப் பாடசாலையை செம்மையாக நடத்தி வந்துள்ளோம். இந்து கலாசார முத்தமிழ் மன்றம் இந்து மாணவர்களை சமய சம்பந்தமான போட்டிகளிலும், கலை நிகழ்ச்சிகளிலும் பங்கு பற்றச் செய்து பல வெற்றிகளையும் ஈட்டியுள்ளது, கலை விழாக்கள் நடத்திப் பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது. சமய விழாக்களையும் நிரல் படுத்தி நடத்தி வந்துள்ளது.

இவ்வருடம் சித்திரை மாதம் புதிதாக வந்த அதிபர் திருமதி ஈ. ஜே. மகேந்திரா அவர்கள் எமது இந்து கலாசார வளர்ச்சிக்குப் பல கோணங்களில் ருந்தும் தடைகளை உருவாக்கி சிறுமைப்படுத்தி வருகிறார். இந்து சமய மாணவர்கள் பெரும்பான்மையாகவுள்ள இப்பாடசாலையில் இவ்வண்ணம் நடந்து கொள்வது வேதனை தருகின்றது. எங்கள் பொன்னான நேரத்தைச் சமூகப்பணி செய்வதில் 'நாம் பெற்ற இன்பம் இவ்வையகமும் பெறுக' என்னும் சிந்தனையோடு செயலாற்றி வருகிறோம். எனவே எங்கள் பணி தொடரவும் இங்கு வாழும் சிறார்கள் ஒழுக்க சீலராகத் திகழவும் - நாம் விடுக்கும் வேண்டுகோள் - எமக்கு ஓர் இந்து அதிபர் இப்பாடசாலைக்கு வேண்டுமென்பதே.

1. இங்கு இந்து மாணவர்கள் பெரும்பான்மையினராகவுள்ளனர்.

2. பாடசாலையில் ஆரம்பிக்கும்போது பாடப்பட்டு வந்த தேவாரம் பாடுவது புதிய அதிபரால் நிறுத்தப்பட்டது. (பின் நாம் முறைப்பாடு செய்த காரணத்தினால் 14-7-91 ல் மீண்டும் அவசர அவசரமாக ஆரம்பிக்கப்பட்டு பாடப்படுகிறது).

3. மத மாற்றத்திற்கு வழி சமைக்கின்றார். (மதம் வலுக்கட்டாயமாக மாற்றப்படுவது வெறுக்கத்தக்கது. இவர் வலுக்கட்டாயமாக புனித விவிலிய நூற்களை வழங்கத் துணை நிற்கிறார்.

4. மன்றத்தினர் வருடாவருடம் வழக்கமாக நடத்தி வந்த குருபூசைகளுக்குத் தடையாக இருக்கிறார். (சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை, சரஸ்வதி பூசை நடத்துவதற்கு இடந்தரவில்லை

5. கலை நிகழ்ச்சிகள் இதுவரைகாலமும் பழகி வந்துள்ளோம். (இவர் கலை நிகழ்ச்சிகள் பழகுவதற்கு எமக்கு அனுமதி தரவில்லை. அனுமதி தந்ததையும் தடுத்துவிட்டு இன்னொரு பகுதியினருக்குக் கொடுத்த முறை அருவருக்கத்தக்கது)

6. அறநெறிப் பாடசாலையில் இப் பாடசாலை மாணவர்களும் வெளி மாணவர்களும் படித்து வந்தனர். இப்மாணவர்கள் பலரைத் திசை திருப்பியுள்ளார். சமய வகுப்பிற்கு பெரும் ஊறு விளைவிக்கிறார்.

7. விவேகானந்த சபையினர் நடத்தும் இந்து சமயப் பரீட்சைக்கு எங்கள் மன்றத்தின் ஊடாக விண்ணப்பம் அனுப்பிய பிள்ளைகளைப் பாடசாலையை விட்டு விலக்குவதாகப் பயமுறுத்தியுள்ளார்.

8. சரஸ்வதி பூசை நடத்த எங்கள் மன்றத்தினருக்கு பாடசாலையில் அனுமதி மறுத்துவிட்டு வேறோர் சங்கத்திற்கு கலைவிழா பழகி நடத்துவதற்கு மூன்று வாரங்கள் (8-10-91 தொடக்கம் 1 11-91 வரை) அனுமதி வழங்கியுள்ளார்.

9. பாடசாலை மாணவரைத் தவறான பாதையில் தூண்டிவிட்டுள்ளார். (அவர்கள் இந்து அதிபரா உங்களுக்கு வேண்டுமென்று ஆர்ப்பரித்து பலாத்காரம் செய்ய முனைந்தனர்).

10. முன்னைய பெற்றார் ஆசிரியர் சங்கத்தைக் கூட்டாது தன்னிச்சைப்படி தமக்குத் தேவையானவரைக் கூட்டி தம்மெண்ணப்படி நடக்கின்றார்.

11. ஞாயிறு அறநெறிப் பாடசாலை நடக்கும் நாளையும் நேரத்தையும் கருத்திற் கொண்டு சச்சரவுகளை உண்டுபண்ணுகிறார். (முன்னறிவித்தல் தந்தால் நாம் அதற்கேற்ப நடப்போமல்லவா).

(தொடர்ச்சி 26ம் பக்கம்)

# அருட் பெருஞ் ஜோதியாய் தனிப் பெரும் கருணையாய் திகழ்ந்த

# இராமலிங்க வள்ளலார்



திரு. கே. கனகரத்தினம்

தென்னார்க்காடு ஜில்லாவில் மருதூர் என்னும் பதியில், இறைவனிடத்தும், சிவனடியார்களிடத்தும் பக்தியும், அன்பும் கொண்டிருந்தனர் திரு. இராமையாப்பிள்ளையும் அவர் இல்லத்தரசி சின்னம்மையாரும். இதன் பயனாக 5-10-1823ல் இராமலிங்கம் என்னும் சற்புத்திரரைப் பெற்றனர். இவர் இளமையில் பள்ளிக்குச் சென்று முறையாக கல்வி பயிலவில்லை. இவர் தம் ஏழாம் வயதிலேயே முன்னைய உணர்வு நன்கு பெற்றிருந்தமையால் ஆழ்ந்த சிவபக்தி அமையப் பெற்றிருந்தார். ஓதாமலே பரஞானம் பெற இறைவன அருளினார். தேவோபாசனை வழி நிற்றல், அன்பு, அறிவு, அவாவுறுத்தல், இரக்கம், இன்சொல், ஈகை, நல்லொழுக்கம், சாந்தம், ஜீவகாருண்யம், மர, செடி, கொடி முதலியவை வாடுவதைக் கண்டு மனம் நொந்து கண்ணீர் சொரிவார். இத்தகைய நற்பண்புகள் தாமாகவே அவரிடம் வந்தடைந்தன. இவர் தன் தமையனாரிடம் கல்வி பயிலும்போதே அரும் பொருள்கள் எல்லாம் இவருக்குப் பழம்பாடமாக இருந்தன.

இராமலிங்க அடிகளார் இளமையிலேயே திருமூலர், தாயுமானவர், ஆளுடைப் பிள்ளையார் வழியான சுத்த சன்மார்க்க தீட்சை பெற்று வீபூதிப்பை உருத்திராட்ச செபமாலை, பன்னிரு திருமுறை ஆகியவற்றைக் கைக்கொண்டொழுகினார். இவர் முருகப்பெருமானிடம் காதலாகி கசிந்துருகி அல்லும் பகலும் மறவாது உபாசித்து வந்தார்.

அடிகளார் முதியோர்பால் வேதாந்த, சித்தாந்த நுண்பொருள்களைக் கேட்டுத் தாம் அதற்கு அரும் பொருள் உரைத்தும், கேட்போர் வியக்கவும், அறிஞர்கள் போற்றவும் உயர்வடைந்தார். தன் ஒன்பதாம் வயதில் கந்தசஷ்டி உபவாசமிருந்து, தணிகாசலபதியான கந்தக் கடவுளின் மீது தோத்திரப் பாக்கள் பல அருளினார்.

ஒரு சமயம் தன் தமையனார் பெரிய புராண விரிவுரை செய்யப்போக முடியாது நோய்வாய்ப்பட்டிருந்தார். அடிகளார் அருமையாக தேவார திருவாசகம் பாடுவதை அறிந்த தமையனார். அடிகளாரை அழைத்து கூட்டத்திற்கு ஏற்பாடு செய்தவர்களிடம் போய் நான் இன்று கூட்டத்திற்கு வரமுடியாது இருக்கிறேன். தன்னை தேவார திருவாசகம் பாடிவிட்டு வரச் சொன்னார் என்று சொல்லத், தலைவர் உங்களுக்குத் தெரிந்ததைப் பேசுங்கள் என்று சொல்லிவிட்டு இன்று நமது பிரசங்கியார் வரவில்லை. அவர் தம்பி இராமலிங்கம் பேசுவார்கள் என்று சொல்லி அமர்ந்துவிட்டார். அடிகளார் அன்று பேசிய பேச்சு அங்கு வந்திருந்தவர்கள் அனைவரையும் மிகவும் கவர்ந்து விட்டது. சிலர் திரு. சபாபதிப்பிள்ளையவர்களிடம் வந்து, இனி நீங்கள் பிரசங்கம் செய்யப் போகாதீர்கள். தம்பியை அனுப்பிவையுங்கள் என்றனர். இதைக் கேட்டு முன் என்றும் பேசிப் பழக்கம் இல்லாமையால் கூட்டத்தில் ஏதேனும் உலறிவிட்டானோ என்று வருந்தினார். பின்பு உண்மையை அறிந்து எல்லையற்ற ஆனந்தமடைந்தார். அதற்குப் பின் அடிகளாரே பிரசங்கத்திற்குப் போவது வழக்கமாகிவிட்டது. வள்ளலார் தன் கொள்கைகளை மக்களுக்கு எடுத்துரைக்க நல்லதோர் வாய்ப்பாகிவிட்டது.

பின்னர் அடிகளார் திருவொற்றியூர்த் தியாகராயப் பெருமானைப் பாடினார். அவரைத் திருவருட் பிரகாச வள்ளலார் என்று அறிஞர் புகழ்ந்தனர். ஒருநாள் இவர் பசியால் வருந்தியிருக்கும் போது தியாகராசப் பெருமான், கோயில் குருக்களைப் போல வேடந்தாங்கி வந்து இவருக்கு சிவ பிரசாதம் நல்கிப் பசியைப் போக்கினார்.

அடிகளார் மணப்பருவம் எய்தியது கண்ட தமையனார், தமக்கையின் புத்திரியை அடிகளாருக்கு திருமணஞ் செய்து வைத்தார். இவர் உலகப் பற்றின்றிச் சகச நிட்டையில் இருந்து வந்தார். இவர் வாழ்க்கைத் துணைவியார் அடிகளாரின் பக்தி

(19ம் பக்கம் பார்க்க)

இங்கிலாந்தில் இந்து கலாசாரம் — 6

— ஏ. எம். துரைசாமி

# இங்கிலாந்தில் சாயி இயக்கம்



சாயி பஜனை

"மனிதன் என்றும் நினைவில் வைத்திருக்க வேண்டிய மகா மந்திரங்கள் மூன்று உள. அவை கடவுள் மேல் அன்பு வைத்திருத்தல், பாபத்திற்கு அஞ்சுதல், சமுகத்தில் நல் ஒழுக்கத்தைக் கடைப் பிடித்தல் எவர் இந்த கற்பனைகளின் பிரகாரம் கண்டிப்பாய் ஒழுகிறாரோ அவரையே ஒரு உண்மையான முழு மனிதர் என்று அழைக்க முடியும்

"மனிதன் இடைவிடாது இன்பத்தைத் தேடுகிறான். இன்பம் அனுபவிப்பதற்காக எதையும் தியாகம் செய்ய தயாராய் இருக்கிறான். ஆனால் உண்மையான இன்பம் எங்கே கிடைக்கிறது? இன்பம் மனிதனிடத்தே இயல்பாய் உள்ளது. இந்த உண்மையை உணராமல் அறியாமையினால் அவன் புறப் பொருள்களில் அதைத் தேடுகிறான். பிறரை நம்பி வாழும் வாழ்வு துன்பத்தையே தரும். ஆனால் தன்னிடத்தில் (ஆத்மாவில்) நம்பிக்கை வைத்திருத்தல் உண்மையான இன்பத்தைத் தரும். புறப் பொருள்களில் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும் வரை அவன் தன் வாழ்க்கையில் நிலையான இன்பத்தை சுவைக்கமாட்டான். புறப் பொருள்களில் இன்பத்தைத் தேடுவது தாகத்தைத் தணிக்க கானல் நீரை நோக்கி ஓடுவது போலாகும் என்பதை என்று அவன் உணருகிறானோ, அன்றே அவன் தன் மனதை உள் முகமாக திருப்பி தன்னுள் கிடக்கும் ஆனந்தத்தை அனுபவிப்பான்.

"எப்படி உங்கள் வாழ்க்கையை அமைக்கிறீர்கள் என்பது, என்ன உணர்ச்சிகளோடும், மனப்பாங்கோடும் உங்கள் சேவா கைங்கரியங்களைச் செய்கின்றீர்கள் என்பதைப் பொறுத்தது உங்களுடைய வாழ்க்கை. உங்களுடைய எண்ணங்களாலேயே நிச்சயிக்கப்படுகிறது. தீய எண்ணங்களை வைத்திருந்தால் நீங்கள் துன்பமடைய வேண்டும். பரிசுத்த எண்ணங்களுள்ளவனாய் இருந்தால் நீங்கள் ஆனந்தத்தை அனுபவிப்பீர்கள். நீங்கள் இன்பம் அனுபவிக்கிறீர்களோ, கவலை அனுபவிக்கிறீர்களோ என்பதை உங்களுடைய எண்ணங்களே தீர்மானிக்கும்

"எல்லாவற்றிக்கும் அடிப்படை சத்தியமே. சத்தியமே கடவுள். சத்தியம் என்ற பலி பீடத்தில் உங்கள் அகங்காரத்தையும் தன்னலத்தையும் பலியாகக் கொடுங்கள். கடமைகளைப் பக்தியுடன் செய்யுங்கள். உங்களுடைய உடலைக் கடவுளுக்கு ஒரு வேய் குழல் வாத்தியமாக்கிக் கொள்ளுங்கள். அவன் தெய்வீக இசைகளை அதிலிருந்து மீட்டுவான்"

பகவானின் இந்த உபதேசமானது இன்றைய உலகில் வாழும் மாந்தர்களுக்கு எவ்வளவு பயனுள்ளது, அவசியமானது என்பதை நாம் ஒவ்வொருவரும் ஒரு கனமாவது சிந்தித்துப்பார்ப்பது மிக அவசியம்.

எல்லாவற்றிக்கும் சத்தியமே அடிப்படை. சத்தியமே கடவுள் என்கிறார் பகவான். இந்த சத்திய ஒளியே இன்று உலகெங்கும் பிரகாசிக்கிறது. உலகெங்கும் சத்திய சாயி நிலையங்கள் தோன்றுவதற்கு இந்த அடிப்படை உண்மையே காரணம்.

சாயி நிலையங்கள் இல்லாத நாடு ள் உலகில் எங்கும் இல்லை. இங்கிலாந்து நாட்டில் நூற்றுக்கு மேற்பட்ட சாயி நிலையங்கள் உண்டு. இந்த நிலையங்களுக்கெல்லாம் தாய் நிலையமாய் விளங்குவது வெம்பிளிட்டான் சாயி மந்திர் (131-133 AFFHA ROAD, LONDON SW 19 8 PU) இந்த மந்திரில் எல்லா இனத்தவர்களும் (வெள்ளையர்களும் கறுப்பர்களும்) சகோதர பாசத்துடன் ஒன்றுகூடி பிரார்த்தனையில் ஈடுபடுவது கண்கொள்ளா காட்சியாக இருக்கும். பகவானின் 65-வது பிறந்த தினத்தையொட்டி 64 தினங்கள் அகண்ட நாம பஜனை நடத்தினர். தமிழ், தெழுங்கு, கன்னடம், மலையாளம், மராத்தி, குஜராத்தி, ஆங்கிலம் முதலிய மொழிகளில் அஸ்டோத்திர நாமாவழிகளை பாடி மெய் மறக்கச் செய்தனர். இதை நேரில் பார்க்கும் பாக்கியம் எனக்கும் கிடைத்தது.

(15ம் பக்கம் பார்க்க)

கலைஞனின் கனவு

# கல்லிலே கலைவடிவம் காண்கின்ற சிற்பாசாரியார் மகேஸ்வரன்

ஆலயங்களுக்குள்ளே செல்லும்போது அவற்றின் சிற்ப வடிவங்களைக் கண்டு நாம் சொக்கிப் போவதுண்டு. கோபுரங்களிலே கதைகள் கூறும் சிலைகளின் அழகும், பலவித வண்ணங்களும், எம்மை பிரமிக்கவைத்துவிடும். அது ஒரு இலகுவான வேலையல்ல. மன ஒருமையோடு ஆற்றப்படவேண்டிய தெய்வீகப் பணி! கற்பனையும், கையும் உளியும் சேர்ந்து கருங்கற்களை தெய்வ உருவங்களாக சமைத்துவிடுகின்றன. உருவவழிபாட்டைப் போற்றும் இந்துக்களுக்கு அந்த உருவங்கள் கல்மனங்களையும் கரைக்கும் தெய்வங்களாக புனிதம் பெற்றுவிடுகின்றன.

அத்தகையவொரு தெய்வீகப் பணியை தனது தொழிலாகக் கொண்டு ஆலயங்களிலேயே தனது வாழ்வின் பெரும் பகுதியை கழிக்கும் இலங்கையின் பிரபல சிற்பிகளுள் ஒருவரான திரு. எஸ். மகேஸ்வரன் அவர்களை எமது வாசகர்களுக்கு அறிமுகம் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறோம்.



யாழ்ப்பாணம் அராலியைப் பிறப்பிடமாகக் கொண்ட சுப்பிரமணியம் மகேஸ்வரன் தனது இள வயதிலேயே பாரம்பரியத் தொழிலான சிற்ப வேலையை மேற்கொண்டார். இவரது பதின்மூன்றாவது வயதில் 63-ம் ஆண்டு காரைநகர், களபூமி, திக்கரை முருகமூர்த்தி ஆலயத்தில் கருங்கல்லைப் பொளியும் அருட் பணி ஆரம்பமானது.

அன்று தொடங்கிய பணி இன்றுவரை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இலங்கையின் சகல பாகங்களுக்கும் சென்று அறுபதுக்கும் மேற்பட்ட ஆலயங்களை முழுமையாக இவர் கட்டி முடித்துள்ளார். ஆலய அமைப்பு, சிறபம் செதுக்கல், புனர் நிர்மாணப் பணிகள் போன்ற ஆலயங்களோடு தொடர்பான அனைத்து வேலைகளையும் இவரும் இவர்தம் குழுவினரும் ஆற்றுகின்றனர்.

இலங்கையின் திசைகள்தோறும் தான் அமைத்த பல ஆலயங்கள் தெய்வீகப் பொலிவுடன் ஆன்மீக நிலையங்களாகத் திகழ்வதை நினைவுகூர்ந்து பெருமை கொள்கிறார் திரு. மகேஸ்வரன்

அத்தகைய ஆலயங்களுள், தம்பலகாமம் கோணேசர் ஆலயம், உடப்பு காளியம்மன் ஆலயம், போரதீவு காளி அம்மன் ஆலயம், வெள்ளவத்தை மயூராபிளேஸ் பத்திரகாளி அம்மன் ஆலயம், பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயில், கப்பித்தாவத்தை கைலாசநாதர் ஆலயம், தெல்தொட்டை மாரியம்மன் ஆலயம், உடபுசல்லாவ மாரியம்மன் ஆலயம், குருநாகல் பிள்ளையார் ஆலயம், குளியாப்பிட்டி முருகன் ஆலயம் போன்றன குறிப்பிடத்தக்கன.

தற்போது பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் ஆலயப் பணிகளில் ஈடுபட்டுள்ள திரு. மகேஸ்வரன், இந்து கலாசார இராஜாங்க அமைச்சரின் ஆலோசனையின் பேரில், பதுளை, நுவரெலிய மாவட்டங்களில் பல ஆலயங்களை பொறுப்பேற்று புனர் நிர்மாணம் செய்யவும், புதிய ஆலயங்கள் அமையவுள்ள இடங்களில் தமது பங்களிப்பைத் தரவும் முன்வருகின்றார்.

இந்தியா கலைகளின் பொக்கிஷமான நாடு. அங்கே சிற்பங்கள் ஆயிரக்கணக்கான கதைகளைக் கூறுகின்றன. சிற்பிகளின் கற்பனை மாமல்லபுரத்திலே ஒரு சிற்ப உலகத்தையே அமைத்திருக்கின்றது. அத்தகைய ஒரு உன்னத கலையை எமது மரபாகக் கொண்டு நாம் போற்றிப் பேணி வருகின்றோம் எனக் கூறும் திரு. மகேஸ்வரன் தானும் நிறையக் கனவுகளைக் காணுகின்றார்.

எமது நாட்டிலும் மூல வளங்கள் இருப்பதால் மாமல்லபுரத்தில்போல இங்கேயும் ஒரு சிற்பச்சாலை அமைந்து உளிச்சத்தம் இடைவிடாது கேட்கவேண்டும் என விழைகிறார். இது ஒரு கலைஞனின் கனவு.

தனது எண்ணப்படி, கொழும்பிலே ஒரு கலைக்கூடம் உருவாக, இந்துசமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் தரும் பூரண ஆதரவு மகிழ்வு தருவதாகக் கூறுகின்றார்.

(தொடர்ச்சி 19ம் பக்கம்)

நூலகம்

# மனம் கெட்டால் மாநிலம் கெடும்

— ஸ்ரீமத் சுவாமி கங்காதரானந்தா —

பிரமாண்டமான இப்பிரபஞ்ச நியமங்களைப் பற்றிய ஒரு சாமானிய அறிவு உணர்வுக்காவது இம் மண்ணுலக மனிதன் ஒரு கணமேனும் தலைவணங்கி நிற்பானேயானால் இவ் வையகம் பெருஞ் சுகமடைய வழியுண்டு.

மனிதன் இப்பூவுலகில் வாழ்ந்தும் அதன் உண்மைகளை உள்ளபடி அறியாமல் ஒன்றை இன்னொன்றாகவே கருதி வாழ்வதால் ஏமாற்றங்கள் பல சம்பவிக்கின்றன

உண்மையை கிரகிக்கமுடியாத மனம், மாறி மாறி வரும் ஏமாற்றங்களால் தன்னம்பிக்கை இழந்து வாழுந் திறமையுமற்று இறுதியில் மனவெறுப்பால தரந் தாழ்ந்த குணமுடையதாகவும் மாறிவிடுகின்றது.

## மனித சுபாவம்

மனிதருடைய அந்தரங்க உணர்வு தனது சக ஜீவிகளிடம் அன்பும் சமரச பாவனையும் உடையதாயிருந்தபோதிலும், சொந்த விருப்பு வெறுப்புகளுக்குப் பங்கம் விளையும் பொழுது மனித சுபாவம் கொடிய விலங்குகளைவிட மூர்க்க குணமுடையதாகின்றது.



நேற்றுவரையிலும் இனிமையாகவும் நன்மையாகவும் போற்றிப் புகழ்ந்து வந்தவைகள் எல்லாம் கசப்பும் பகைமையும் உடையவைகளாகவே மாறிவிடுகின்றன. பகைமைகொண்ட மனமும் பாகனில்லாத யானையும் ஒன்றே. இங்ஙனம் சுயநலத்தால் வெறுப்பும் பகைமையும்கொண்டு சீறும் மனம் நல்ல குணங்களெல்லாமிழந்து மதயானை போன்று தனக்கும் சமுதாயத்திற்கும் பெருங் கேடுகளை விளைவிக்கின்றது.

இப்படியான கரவுக் குணத்திலிருந்தெழுந்த விளைவுகள் தனி மனிதனிலிருந்து உலக ரீதியில் தோன்றிக்கொண்டிருக்கும் சகல தொல்லைகளுக்கும் மூலகாரணம்.

## மிக அரிது

காலம் போகப் போகச் சிறிதேனும் உள்ளக் களிப்புடன் அமைதி நிறைந்த ஆத்மார்த்தமான ஒருவரைக் காண்பதே அரிதாகிவிட்டது.

மனிதன் தன் தன் உணர்வுகளை, செயல்பாடுகளை உன்னிக் கவனிப்பதில்லை. மனம் தோற்றுவிக்கும் விருப்பு வெறுப்புகளின் பலாபலன்களை அலசி ஆராய்வதுமில்லை.

கெடுபிடிக்குரிய யதார்த்த காரணங்கள் வேறெங்கேயோ இருக்கையில், விருப்பு வெறுப்புகளை மாத்திரம் முன்வைத்துப் பிரச்சினைகளைத் தீர்க்கப் பார்த்தால் மேலும் புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்.

மனிதன் மனச்சாட்சியை நேர்கோட்டில் வைத்து காரிய காரணங்களைப் பார்த்தறியப் பழகவேண்டும்.

## மனித மனம்

பால் அதிக சத்து நிறைந்த உணவாயினும் கெட்டால் நச்சுத்தன்மையடைகின்றது.

மனத்தால் வாழுகின்றவன் மனிதன். மனிதருடைய மனம் கெட்டுவிட்டால் இவ்வையகம் முழுவதும் கெடும்.

அடிமனம் விஷக் கலப்பில்லாத அமிர்த துல்லியமானது. பேராசையும் அகங்காரமும் மனமென்ற பொதிக்குள் விஷத்தை ஊற்றிவிடுகின்றது.

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

(சென்ற இதழின் தொடர்ச்சி)

# இந்து நிறுவனங்கள் சிறப்பாக செயற்பட சில யோசனைகள்

திரு. கோ. சேனாதிராஜா எல்.எல்.பி.

"இந்து நிறுவனங்கள் சிறப்பாக செயற்பட ஒன்றிணைந்த அமைப்பை பெற வேண்டும்" என்ற தலைப்பில் இந்து சமய கலாசார அமைச்சின் இணைப்புச் செயலாளரான சட்டத்தரணி திரு. கோ. சேனாதிராஜா எல். எல். பி. அவர்கள் சென்ற இதழில் வெளிவந்த கட்டுரையில் சில யோசனைகளை முன்வைத்தார். கட்டுரையின் பிற்பகுதியில் இந்து நிறுவனங்கள் எவ்வாறு ஆரம்பிக்கப்படுகின்றன, இந்து சமய கலாசார அமைச்சில் பதிவு செய்து கொண்டதும் ஓரிரு நிகழ்ச்சித் திட்டங்களை அமுல்படுத்துவதோடு சில காலத்தின் பின்னர் மறைந்துவிடுவதும் பிரத்தியட்சமமாய் காணக்கூடியதாய் இருப்பதை இங்கு எடுத்துக்காட்டுகிறார்.

இந்து நிறுவனங்கள் சிறப்பாக செயற்பட வேண்டுமானால் ஒன்றிணைந்த அமைப்பின் மூலமே சாத்தியப்படும் என்பதையும் அதற்கு சில செயற் திட்டங்களையும் இங்கே முன்வைத்துள்ளார். இந்து நிறுவனங்கள் அனைத்தும் சிறப்பாக செயற்பட வேண்டுமென்பதில் அக்கறையுள்ளோர் திரு. சேனாதிராஜா அவர்களின் யோசனைகளை கவனிப்பார்களாக.

—ஆசிரியர்

இந்து நிறுவனங்களைப் பொறுத்தளவில் இயற்றப்படும் யாப்பில் ஏராளமான தெளிவின்மையினையும், தெளிவில்லாதபடியினால் தொடர்புபடுத்த முடியாத விடயங்களும் இருக்க காணப்படுகின்றன. குறிப்பாக மலையகத்திலே "புற்றீசல்களைப்போல" பல்வேறு பெயர்களைக் கொண்ட இந்து நிறுவனங்கள் ஆரம்பிக்கப்படுகின்றன. இந்நிறுவனங்கள் இந்து கலாசார அமைச்சினால் பதிவு செய்துக்கொண்ட தன் பின்னர் ஓரிரு நிகழ்ச்சி திட்டங்களை அமுல்படுத்துவதோடு சிலகாலத்துக்குக் காணாமல் போய் விடுகின்றன. சில இந்து நிறுவனங்கள் எதற்காக இவ்வாறான நிறுவனங்களை தோற்றுவித்தன என்பதை மறந்து தொடர்பில்லாத பல்வேறு விடயங்களைக் கவனிக்கும் வருந்தத்தக்க நிலையில் உள்ளன. முக்கியமான நோக்கம் இந்துசமயத்தை பேணி காப்பது எனில் துணைநிலை நோக்கம் முதல் நோக்கத்தை செயற்படுத்த என்னென்ன விதத்தில் செயற்பட வேண்டும் என்பதை தெளிவாக வரையறுத்துக் கொள்ளுதல் வேண்டும். மேலும் உறுப்பினர்களின் அதிகாரம் சம்பந்தமான விடயங்கள், ஒவ்வொரு தனி உறுப்பினர்களுக்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், எத்தகைய சூழ்நிலையில் ஒரு உறுப்பினர் இன்னொரு உறுப்பினரின் அதிகாரத்தில் தலையிடலாம், எத்தகைய உறுப்பினர்களின் முடிவுக்கு சபை கட்டுப்பட வேண்டும், முக்கிய உறுப்பினர்கள் சமூகம் தராதவிடத்து என்னென்ன நடவடிக்கை தொடரப்பட வேண்டும், எத்தனை கால இடைவெளிக்குப் பின்னர் சபை கூட்டப்படல் வேண்டும், சபை உறுப்பினர் தெரிவு எம்மாதிரி நடத்தப்படலாம் என்பது போன்ற பல்வேறு விடயங்களை தெளிவாக துணைவிதிகளில் குறிப்பிடலாம். இவ்வாறு தெளிவாக இவற்றை தீர ஆலோசனை செய்து "யாப்பாக" எழுதிக்கொள்ளும்போது அடிக்கடி உறுப்பினர்களிடையே எழும் அதிகாரம் சம்பந்தமான பிரச்சினைகள், நோக்கங்களில் எழும் பிரச்சினைகள், உறுப்பினர்களைத் தெரிவதில் ஏற்படும் அசதியீனங்கள் என்பன போன்ற பல்வேறான பிரச்சினைகளை அமைதியான முறையிலே தீர்த்துக் கொள்ள முடியும்.

கம்பனி சட்டத்தில் கூறப்பட்டதைப் போல எதிர்காலங்களில் குறிப்பிட்ட நோக்கத்துடன் வேறு நோக்கங்களை இணைத்துக் கொள்ளுவதற்கு அல்லது விலக்கிக்கொள்வதற்கு குறிப்பிட்ட நிறுவனம் ஆரம்பித்து ஐந்து வருடங்களின் பின்னர் அவ்வாறு மாற்றிக் கொள்ளலாம். இவ்வாறு நோக்கத்தினை மாற்றம் செய்யும்போது சிக்கனமாக, திறமையாக, துணைநோக்கங்களை மீறாத வகையில், அடிப்படை நோக்கத்தை மீறாத வகையில் மாற்றப்படலாம். இந்து நிறுவனங்களைப் பொறுத்தளவிலும் மேற்சொன்ன கம்பனி சட்டவிதியைக் கடைபிடிப்பதனால் அடிக்கடி கொள்கைகளை மாற்றிக்கொள்வதும், நிமைத்தமாத்திரத்தில் வேறு கொள்கைகளைத் திணித்துக் கொள்வதும், இதன்பயனாக உறுப்பினர்களிடத்தில் வாக்குவாதம், கசப்புணர்வு, புரிந்துணர்வின்மை, ஒற்றுமையின்மை, நிறுவனத்தின் கொள்கையில் நிலையின்மை போன்ற பல்வேறு வகையான அசௌகரியங்களையும் அதனாற் விளையும் கெடுதலையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

## உறுப்பினர் சபை

கம்பனியொன்று திறம்பட செயல்பட இயக்குனர் சபை முக்கியமானது. கம்பனியென்ற வாகனத்தை இயக்கிவைப்பதான இயந்திரத்தையொத்தது இயக்குனர் சபை எனலாம். இந்து நிறுவனங்களைப் பொறுத்தளவில் இந்து நிறுவனங்களை நடாத்திச்செல்லும் உறுப்பினர் சபையை இயக்குனர் சபையோடு ஒப்பிடக்கூடியதாகவுள்ளது. இந்து நிறுவனத்தின் மேம்பாட்டுக்காக இயக்குனர் சபை ஒன்று

(தொடர்ச்சி 17ம் பக்கம்)

# மணிவிழாக் கண்ட நாதஸ்வரமேதை என். கே. பத்மநாதன்



திரு. என். கே. பத்மநாதன்

இலங்கையின் நாதஸ்வர உலகில் மேதையெனப் போற்றப்படும் கலாசூரி என். கே. பத்மநாதன் தம்பதியினரின் மணிவிழா ஆக்டோபர் 14, 15, 16-ம் திகதிகளில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் இடம்பெற்றது.

நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பிரமாசாரிய சுவாமிகள் அவர்கள் அருளாசியுடன் துர்க்கா துரந்தரி சிவத் தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஈழத்தின் சிரேஷ்ட சிவாச்சாரியார்களால் அறுபதாம் திருமண வைபவம் நிறைவேற்றப்பட்டது.

நாதஸ்வர மேதைகளும், அறிஞர்களும், கலைஞர்களும் கலந்துகொண்டு தம்பதியரை மனமார வாழ்த்தினர்.

திரு. பத்மநாதனின் நாதஸ்வர ஆசான்களாகிய மாவிட்டபுரம், திரு. ராஜா, திரு. பி. எஸ். ஆறுமுகம் ஆகியோரை தம்பதியர் கௌரவித்து ஆசி பெற்றனர்.

திரு. பத்மநாதன் தம்பதியர்க்கு இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் பி. பி. தேவராஜ் அவர்கள் அனுப்பிவைத்துள்ள செய்தியில்,

"நம் நாட்டின் நாதஸ்வர உலகில் முடிசூடா மன்னனாகத் திகழும் திரு. என். கே. பத்மநாதன் தனது இசை வளத்தால் தான் பிறந்த மண்ணுக்கும், இசைக் கலைக்கும் அரும்பணி புரிந்த மேதையாகத் திகழ்கிறார்.

இசைக்கெனவே தமது வாழ்வை அர்ப்பணித்து புனிதமும் நிறைவும் மிக்க கலைவாழ்வோடு அறுபதாம் திருமணம் காணும் இக்கலைஞரையும் அவர் தம் துணைவியாரையும் வாழ்த்துவதில் இசை உலகுடன் இணைந்து நானும் பெருமை கொள்கிறேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.



திரு. கே. கே. சுப்பிரமணியம்

பிரபல சமூக சேவையாளரான திரு. கே. கே. சுப்பிரமணியம் ஜே. பி. அவர்கள் தமது செய்தியில் இசை உலகுக்கு மகத்தான சேவை செய்துள்ள நாதஸ்வரமேதை கலாநிதி என். கே. பத்மநாதன் அவர்கள் நீடூழி வாழ இறைவனைப் பிரார்த்திப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# பணிகளுக்கே தமது வாழ்வை அர்ப்பணிக்கும் மில்க்வைற் கனகராசா



சிவதர்மவள்ளல் திரு. கே. கனகராசா

"மில்க்வைற்" என்றதுமே சங்கிலித் தொடர் போல பல விடயங்கள் அடுத்தடுத்து ஞாபகத்திற்கு வருகின்றன. இது இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி, பல நாடுகளிலும் வாழுகின்ற தமிழ்ச் சான்றோர்கள், பொதுப்பணி புரியும் நிறுவனங்களைச் சார்ந்தோர் அனைவருக்கும் மிகவும் பரிச்சயமான பெயர்.

செய்யும் தொழிலை தெய்வமாக மதித்து அந்தத் தொழிலுக்கூடாக சமூக சேவையை இயக்கமாக வளர்த்தெடுத்த பெருமை, மில்க்வைற் என்ற நிறுவனத்திற்கும், அதன் உரிமையாளர் திரு. க. கனகராசா ஜே.பி. அவர்களுக்கும் சாரும் மில்க்வைற் நிறுவனம், வெளி அழுக்கைப் போக்கும், சவர்க்காரத்தை உற்பத்தி செய்யும் நிறுவனமாக மட்டுமல்லாமல் மன அழுக்கைப் போக்கவும் பணிகள், சேவை, தொண்டு என்ற பல்வேறு நற்செயல்களை உற்பத்தி செய்து, பாரிய ஒரு தாக்கத்தை இலங்கை வாழ் தமிழ் மக்களிடையே ஏற்படுத்தியது.

அவ்வகையில், சமூக சேவைக்கென ஒரு தொழில் நிறுவனத்தையே பயன்படுத்திய அதன் உரிமையாளர் கலாநிதி க. கனகராசா அவர்களைப்பற்றியும் அவர்தம் பணிகள் பற்றியும் பல நூல்கள் எழுதலாம். எனினும், எமது இதழில் சில வரிகளை எழுத நாம் முனைந்தோம்.

யாழ்ப்பாணம், கொட்டடி எனும் இடத்தில் 02-11-1927ம் திகதி பிறந்த கனகராசா அவர்கள் பிறந்த ஆண்டிலேயே மில்க்வைற் என்ற சவர்க்காரத் தொழிலகமும் ஆரம்பமானது.

கனகராசா தமது இளமைக் கல்வியை, வெஸ்லியன் மிசனரிமாரின் கில்னர் கல்லூரியில் கற்றபின், தந்தையார் தொடக்கிவைத்த குடிசைக் கைத்தொழிலை பொறுப்பேற்று, மிகுந்த பிரயத்தனத்தோடு, தொழிற்சாலையாக்கி வைத்தார்.

இவர் தம் அயராத முயற்சியால் தொழிலகம் சிறிது சிறிதாக விரிவு பெற்றது. தொழிலாளர்கள் அதிகரித்தனர். ஆங்கிலேயர் காலத்து இறக்குமதிச் சரக்குகளோடு போட்டியிட்டு வெற்றியீட்டுவதற்கு இவரின் விடாமுயற்சியும் கடின உழைப்புமே காரணமாயின.

தொழில் விரிவுபெற்ற அதேவேளை தமது வாழ்வையும் ஆன்மீகப் பின்னணியில் அமைத்துக்கொண்டார். இமயஜோதி சுவாமி சிவானந்தரின் வழிவந்த சுவாமி சச்சிதானந்தா யோகிகளிடம் யோகாப்பியாசங்களைப் பயின்று உடல் வளமும், மன நலமும் ஒன்றிணைந்த வாழ்வைப் பெற்றுக் கொண்டார்.

தொழிற்சாலை விரிவடைந்ததோடு புதிய புதிய உற்பத்திகள் உருவாகின. புதிய சவர்க்கார வகைகள் அறிமுகமாயின.


நுளம்பைப் போக்கும் தூபங்கள், எண்ணெய் முழுக்குக்கான தூள்வகைகள், பயிர்களுக்கான உர வகைகள் என்ற பல்வேறு தொழில்கள் ஒன்றுடன் ஒன்று பிணைந்து வளர்ந்தன.

இங்ஙனம் ஒரு நிறுவனம் வளர்ச்சிபெற்ற அதே சமகாலத்தில், சமயப்பணி, சமூகப்பணி, தமிழ்ப்பணி நாட்டுப்பணி என பல்வேறு தொண்டுகளுக்கும் "மில்க்வைற்" நிறுவனம் தன்னை தியாகம் செய்தது. தாமும் வாழ்ந்து தாம் பெறும் பொருள் வளத்தால் பிறரும் வாழ வழி செய்ய முடியுமென நிரூபித்தார் திரு. கனகராசா அவர்கள்.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)

# 'இந்து கலாசாரம்' தலைசிறந்த சமய இதழ்

## வெளியீட்டு விழாவில் அமைச்சர் பெருமிதம்



நமது இந்து கலாசாரம் இரண்டாம் ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா கும்பனித்தெரு சைவ முன்னேற்றச் சங்க நால்வர் மணிமண்டபத்தில் அண்மையில் நடைபெற்றபோது பிரதம அதிதி இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்களிடமிருந்து, ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோவில் அறங்காவலர் சபைத் தலைவர் திரு. வி. டி. வி. தெய்யநாயகம் பிள்ளை அவர்கள் ரூபா 2001/- அன்பளிப்புச் செய்து முதல் பிரதியை அமைச்சரிடமிருந்து பெறுவதையும் ஆசிரியர் குழுவைச் சார்ந்த திருவாளர்கள் ஆர். வைத்தமாநிதி ஏ. எம். துரைசாமி ஆகியோர் அருகில் நிற்பதை படத்தில் காணலாம்.



விழாவில் கலந்துகொண்ட அமைச்சரும் பிரமுகர்களும்

இந்து கலாசாரம் இதழின் இரண்டாவது ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா அண்மையில் கொழும்பு கும்பனித் தெரு சைவ முன்னேற்றச் சங்க நால்வர் மணி மண்டபத்தில் கொழும்பு இந்து கலாசார மன்றத் தலைவர் திரு ஆர். வைத்தமாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

திருமதி அ. யோகசுந்தரம் அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்.

செல்விகள் பிரிய தர்ஷனி சதாசிவம், தஷாந்தி நிரேக்கா லோகேஸ்வரன் இருவரும் நடன விருந்தளித்தனர்.

விழாவுக்கு பிரதம அதிதியாக இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் மாண்புமிகு திரு பி. பி. தேவராஜ் அவர்கள் வருகை தந்திருந்தார். அமைச்சர் பேசுகையில் பின்வருமாறு குறிப்பிட்டார்.-

இந்து சமய மக்கள் இன்று பிற மதங்களுக்கு மாறி வருவதை கண்கூடாகப் பார்க்கிறோம். கல்வி அறிவு குறைந்த பாமர மக்களே இவ்வாறு தொன்றுதொட்டு நம் மூதாதையரால் பேணிப் போற்றி வரப்பட்ட சைவ சமயத்தை துறக்கின்றனர். இதற்குக் காரணம் அம்மக்களிடையே சைவ சமய வரலாறும் தத்துவங்களும் முறையாக விளக்கப்படாமையே எனவே அந்தகைய மக்களிடையே சமய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது மிக, மிக அவசியமாகும்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில்; இன்று தலைநகரிலிருந்து வெளிவரும் ஒரு தலை சிறந்த திங்கள் இதழே 'இந்து கலாசாரம்' ஆகும். இத்தகைய சமயப் பத்திரிகையில் பாமர மக்களாலும் புரிந்து அறிந்து கொள்ளக் கூடிய விடயங்களை எழுதி வெளியிட வேண்டும். அதன் மூலம் அம்மக்கள் தமது மதத்தின் பெருமைகளை உணருவர். அதற்கேற்ப

(தொடர்ச்சி 22ம் பக்கம்)

மில்க்வைற்

(11ம் பக்க தொடர்ச்சி)

தாம் வாழும் சூழலை நன்கு அவதானித்து, பனை மரங்களை வளர்த்தலை ஊக்குவித்தார். கற்பகதருவென போற்றப்படும் பனை வளர்த்தலை இயக்கமாக வளர்த்தார். குடாநாட்டின் பல பாகங்களிலும், புதிய குளங்கள் தோன்றவும், இருந்த குளங்களை ஆழப்படுத்தவும் வகை செய்தார். பாடசாலைகள் தம்மளவில் வசதிகளுடன் நிறைவுபெற பல வழிகளிலும் உதவிகளை நல்கினார்.

சமயத்தோடும், தமிழோடும் தொடர்புடைய பல நூறு நூல்களை அச்சிட்டு மாணவர்களுக்கும், சமய நிறுவனங்கள், வாசிகசாலைகள் என்பவற்றிற்கும் வழங்கினார். மாதந்தோறும், தமிழ், ஆங்கிலச் செய்திப் பிரசுரங்களை வெளியிட்டார். அறிஞர்களையும், புலவர்களையும், ஆன்மீகச் சான்றோரையும் ஆதரித்துப் போற்றினார். திக்கற்று நின்ற அநாதைகளும் வயோதிபர்களும் நல்வாழ்வு பெற வழி சமைத்தார்.


இவர் தம் பணிகளை நாம் விளக்குவதாயின் அவை வளர்ந்துகொண்டே செல்லும். அவர் தம் சிந்தனையெல்லாம் சமூகப்பணி பற்றியதாகவும் பொது நலங் கருதியதாகவும் இருந்தது. இங்ஙனம் அவர் வாழ்வு அர்ப்பணிக்கப்பட்டமை கருதி இருபத்தேழு பட்டங்கள் அவரை நாடி வந்தன. தமிழுலகம் மில்க்வைற் கனகராசாவை வியந்து போற்றியது. அவர் பெற்ற பட்டங்களுள் அமெரிக்க பல்கலைக் கழகமொன்று அளித்த கலாநிதிப்பட்டம், அவர் ஆற்றிய பணிகளுக்கு உலகம் அளித்த அதி உன்னத அங்கிகாரம் என நாம் கருதலாம்.

இன்று குடாநாட்டின் பல்வேறுபட்ட சிரமங்களுக்கும், சோதனைகளுக்கும் மத்தியிலும் தம்மாலான பணிகளை தவறாது நிறைவேற்றி வருகின்ற கனகராசா அவர்களை, எவ்வளவு பாராட்டினாலும், அது தகும்.

தமது தொழில் நிறுவனத்தினூடாக உன்னதமான ஒரு வாழ்வியலை வகுத்துக் காட்டிய மில்க்வைற் கனகராசா அவர்களின் பணிகள் மேலும் சிறக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம். நீண்ட ஆயுளோடும், அனைத்து நலன்களோடும் அவர் வாழ வேண்டுமெனவும் எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

— சங்கரன் புதல்வன்

# பரத அரங்கேற்றம்



அமரர் எஸ். டி. சின்னத்துரை ஜே. பி. அவர்களின் புதல்வரான திரு. எஸ். டி எஸ். அருளானந்தம் முன்னாள் செனட்டரான திரு. டி. நீதிராஜா ஜே.பி. அவர்களின் புதல்வியாரான திருமதி அருளானந்தம் தம்பதியரின் ஒரே புத்திரி செல்வி அஞ்சனா அருளானந்தனின், பரத அரங்கேற்றம் ஒக்டோபர் மாதம் 19-ம் திகதி சனியன்று மாலை, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. பிரபல நடன மணியான வாசுகி ஜெகதீஸ்வரனின் மாணவியான அஞ்சனாவின் அரங்கேற்றத்திற்கு ஜனாதிபதியின் பாரியாரான திருமதி ஹேமா பிரேமதாச அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு வாழ்த்தினார்.

---

சக்திக்கனல்

மனிதன் தேவனாவதே படைப்பின் சாரம். சாதாரண மனித வாழ்வு தெய்வத்தன்மை பெற வேண்டும். மனவேறுபாடுகளால் துன்பச் சூழலில் அகப்பட்டுத் தவிக்கும் உயிர் இன்பமாதல் வேண்டும். ஆசை ஆனவங்களால் எழும் போர் விளைவுகள் ஒழிந்து, மனித சமுதாயம் ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் வாழவேண்டும். எந்தவொரு மனிதனும் இன்னொரு மனிதனுக்கு அடிமையாக வாழ முடியாது. எல்லோரும் ஆத்ம சுதந்திரர்களாக தெய்வ ஆசிபெற்றவர்களாக கட்டும் கவலையுமின்றி வாழ வேண்டும். செய்கின்ற செயலின் பயனை எல்லாம் தெய்வ நிவேதனமாக்க வேண்டும். நோய், துன்பம், மரணபயம் போன்றவை இன்றி அமரத்தன்மை பெற வேண்டும். இந்நிலை பெற மனிதன் சக்திக்கனலாகப் பழக வேண்டும். அந்த சக்தியைத் தந்தருளுமாறு அன்னை பராசக்தியைப் பிரார்த்திக்க வேண்டும்.

— மகான் ஸ்ரீ அரவிந்தர்

# லண்டனில் வீணை அரங்கேற்றம்



லண்டனில் வாழும் இலங்கையர்களான திரு. வ. இ. பத்மநாதன் திருமதி வர்சுகி பத்மநாதன் தம்பதியரின் செல்வப் புதல்வி விஜயலட்சுமி பத்மநாதனின் வீணை அரங்கேற்றம் செப்டெம்பர் மாதம் 21-ம் திகதி லண்டன் ஆசெம்பிளி ஹோலில் நடைபெற்றது.

மேலைத்தேய, கர்நாடக இசைத் துறைகளில் மிகவும் புலமை பெற்றுள்ள இலங்கையரான திருமதி ருத்ராணி பாலகிருஷ்ணன், செல்வி விஜயலட்சுமியின் வீணை ஆசிரியை ஆவார்.

திரு. பத்மநாதன் லண்டன் சைவ முன்னேற்றச் சங்கக் கிளையின் உபதலைவராக இருந்து அரும் பெரும் சமயப் பணிகளை ஆற்றிவருகின்றார்.

செல்விக்கு நமது வாழ்த்துக்கள்!

பதுளை

# ரொக் ஹில் ஆலயம்

பதுளை மாநகர சபை எல்லைக்குள், ஸ்பிரிங் வெலி பாதையில் அமைந்துள்ளது ரொக் ஹில் காளியம்மன் ஆலயம். உயர்ந்த மலைகள் சூழ்ந்த பகுதியில், மிகவும் அமைதியும், அழகும், பசுமையும் நிறைந்த சூழலில் அமைந்துள்ள இவ்வாலயம், ஆயிரக்கணக்கான மக்களை ஈர்த்து வருகின்றது.

ஐம்பத்துமூன்று வருடங்கள் பழமை வாய்ந்த இவ்வாலயம், எண்பத்துமூன்றாம் ஆண்டு நடைபெற்ற அசம்பாவிதங்களின்போது சேதமுற்றாலும், நல்லன்பர்கள், காளி பக்தர்களின் தளராத முயற்சியினால், மீண்டும் தெய்வப் பொலிவுடன் திகழ்கின்றது.

மலைகள் சூழ்ந்த ஒரு தனியிடத்தில் இவ்வாலயம் அமைந்திருப்பினும், வெகு தூரத்திலிருந்தும் பக்தர்கள் பெருநம்பிக்கையுடன் இங்கே குழுமுகின்றார்கள். தமது இன்ப துன்பங்களை காளியின் அருட் கடாட்சத்திற்கு முன்வைக்கின்றார்கள்.

மனம் நிறைந்த நம்பிக்கையோடு, இந்து மதத்தவர்கள் மட்டுமன்றி வேற்று மதங்களைச் சார்ந்தோரும் இவ்வாலயத்திற்கு வருகை தருவதை நாம் தினமும் காணலாம்.

புதிதாக வாங்கப்படும் வாகனங்கள் இவ்வாலயத்தில் பூஜைகளிற் கலந்துகொண்ட பின்பே தமது பயணங்களை மேற்கொள்கின்றன.

தற்போது இந்து அமைச்சின் அநுசரணையோடு ஆலயத்தின் முன்னால் முன் மண்டபம் ஒன்று எழுந்துகொண்டிருக்கின்றது. இங்ஙனம் வளருகின்ற இவ்வாலயத்தின் தெய்வ சாந்நித்தியம் அனைவருக்கும் நிறைவு தரவேண்டுமென்பதே எமது பிரார்த்தனை.

செய்தி:

க. மகேசப்பிள்ளை
பதுளை



செல்விகள் பிரியதர்ஷனி சதாசிவம்
தஷாந்தி நிரோக்கா லோகேஸ்வரன்

நமது இந்து கலாசாரம் இரண்டாம் ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றபோது நடன விருந்தளித்த செல்விகள் பிரியதர்ஷனி சதாசிவம், தஷாந்தி நிரோக்கா லோகேஸ்வரன் ஆகியோர். இருவருக்கும் இந்து கலாசாரத்தின் சார்பாக பரிசுகள் வழங்கப்பட்டன.

# அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுலப் பணிகளுக்கு உதவுங்கள்

வடகிழக்கின் துன்பங்களுக்கும், இடர்ப்பாடுகளுக்கும் மத்தியில் ஆங்காங்கு கருணையுணர்வுடன் தொண்டுகளும், அரும் பணிகளும் நடைபெற்று வருகின்றன. நல்ல மனங்கள் ஒன்று கூடி, பிறர் நலம் பேணும் பெருமை மிகும் கடமையை ஆற்றி வருகின்றன.

அந்தவகையில், சமயப் பணியோடு சமூகப்பணியும் ஆற்றி வருகின்றது அம்பாறை மாவட்ட திருநாவுக்கரசு நாயனார் குருகுல ஆதீனம். கிழக்கு வாழ் மக்களின் சைவ சமய மேம்பாட்டை உறுதிப் படுத்தும் நிறுவனமாக இது திகழ்கின்றது. இக் குருகுல ஆதீனம் தொடங்கப்பட்டு ஏறத்தாழ பதின் மூன்று ஆண்டுகள் ஆயினும் 1990-ம் ஆண்டிலிருந்து இங்கு இயங்கும், ''சைவ அநாதைச் சிறுவர்'' இல்லம் அரியதொரு கடமையை நிறைவேற்றி வருவதை நாம் நினைவு கூருகின்றோம். குருகுலம் பிரார்த்தனை மண்டபம், சிறுவர் இல்ல மண்டபம், நூலக மண்டபம் என்பவற்றைக் கொண்டு சொந்த நிலப் பரப்பில் அமைந்துள்ளது.

தற்போது, மேலும் முடிவுறாத நிலையிலுள்ள கட்டிடப்பணிகள், மின்சார வசதி, மாணவர் தங்கும் விடுதி வசதி என்பவற்றிற்காக ஏறத்தாழ ஏழு லட்சம் ரூபாவுக்கு மேல் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாண்டுக்குள் இப்பணிகளை நிறைவு செய்துவிடவும் குருகுலம் திட்டமிட்டுள்ளது.

ஆதலின் காலத்துக்கேற்ற பணியான அநாதைச் சிறுவர்களைப் பராமரித்து அரிய தொண்டினை ஆற்றும் குருகுலத்தின் தேவைகளை நிறைவேற்ற அனைத்துத் தரப்பினரதும் பொருளுதவி அத்தியாவசியமானதாகும். கருணையுள்ளமும், தயாள சிந்தையும் கொண்ட நல்லோர் இப்பணிக்கு உதவுமாறு அன்போடு வேண்டிக்கொள்கிறது குருகுல ஆதீனம்.

ஆதீனத்தின் வங்கிக் கணக்கு இலக்கம்: மக்கள் வங்கி இல: 20 5. திருக்கோயில். மேலும் தேவைகட்கு, பொருளாளர் திரு. பா. சந்திரரேஸ்வரன் அவர்களுடன் தொடர்புகொள்ளலாம்.

(திருநாவுக்கரசு நாயனார் குருகுலம், தம்பிலுவில்)

---

## இங்கிலாந்தில் சாயி

(6ம் பக்க தொடர்ச்சி)

பகவானின் 65-வது பிறந்த தினம் நவம்பர் 23-ம் திகதி எல்லா நாடுகளிலும் கொண்டாடப்பட்டது. பகவானின் பிறந்த தினத்தில் அவரை நேரில் தரிசிப்பதற்கு ''சாயிமந்திர்'' பாலவிகாஷ் மாணவர்கள் விமானம் ஏறி புட்டபர்த்தி வந்து போக தவறுவதில்லை.

சாயி மந்திரில் பாலவிகாஷ் வகுப்புகள் மிகச் சிறந்த முறையில் நடைபெறுகின்றன. பாலவிகாஷ் மாணவர்களின் அறிவுத் திறமையும் ஆங்கிலத் தேர்ச்சியும் பிரமிக்கத்தக்கது.

சுமார் 11 ஆண்டுகளாக ''SAI CHILDREN'' என்ற மலரை ஆங்கில மொழியில் வெளியிடுகிறார்கள். இதில் மாணவ மாணவிகளின் ஆக்கங்கள் நிறைய வெளிவருகின்றன.

பகவானின் அற்புதங்கள், பகவானின் உபதேசங்கள், பகவானை நேரில் தரிசித்தபோது பகவான் கேட்ட கேள்விகள், மாணவர்கள் அளித்த பதில்கள் மற்றும் விஞ்ஞானம், பௌதிகம், புவியியல் சம்பந்தமான கட்டுரைகளும் இடம் பெறுகின்றன. அழகான அச்சுப் பதிப்பு.

''SAI CHILDREN'' ஆசிரியர் குழுவில் சங்கர், ஜெய், சக்தி, ரஞ்சித், பாபு, வாகீஸன், கீதா முதலியோர் பணியாற்றுகிறார்கள். இவர்களின் முயற்சி பாராட்டத்தக்கது.

''சாயி மந்திர்'' பணி மகத்தானது. முழு இங்கிலாந்து நாட்டிற்கும் ஒளி விளக்காய் திகழ்கிறது. பணி தொடர பகவானின் திருவடிகளை வணங்குகிறேன்.

---

## நவராத்திரியை

### தேசிய விழாவாக்கினால் என்ன?

நவராத்திரி காலத்தை அனைத்து இந்துமக்களும் சிறந்த மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர். பத்துத் தினங்களும் பாடசாலைகள், ஆலயங்கள், இந்து இல்லங்கள் எங்கு பார்த்தாலும் ஆன்மீக உணர்வு பீறிட்டுப் பொங்குகின்றது.

எனவே நவராத்திரி விழாவை தேசிய விழாவாக்கி நாடளாவிய ரீதியில் அனைவரும் பங்கேற்கும் வண்ணம் ஒரு பெருமுயற்சியை மேற்கொள்ளலாம் என எமது சாவத்தை செய்தியாளரும், அன்பு வாசகருமான திரு. அ. பொன்னம்பலம் அவர்கள் விளாவெழுப்பியுள்ளார்.

இதுதொடர் தீர்க்கமான முடிவுகளுக்கு இந்து கலாசார இராஜாங்க அமைச்சு. அறிஞர்கள், இந்து மக்கள் அனைவர் சிந்தனைக்காகவும் விட்டுவிடுகின்றோம்.

— ஆசிரியர்

நூலகம்

# வாசகர் நெஞ்சம்

நான் கலைப்பிரிவில் உயர்தர வகுப்பு கற்கும் ஒரு மாணவன் உங்கள் இதழ்கள் எமக்கு மிகவும் பயனுள்ளனவாக இருக்கின்றன. எனது இந்து நாகரீகம் பாடத்திற்கு தங்கள் இதழும் உதவுகின்றது. எனவே தொடர்ந்து இதனைப் பெற என்ன வழி என தெரிவியுங்கள்.

**என். வி. பத்மராஜா**
இந்து தமிழ் மகா வித்தியாலயம்
புத்தளம்

★

நல்ல சமய விடயங்களை உள்ளடக்கியதான இந்து கலாசாரம் இதழ்கள் தொடர்ந்து கிடைக்கின்றன. இந்து மாணவர்களுக்கு இந்த இதழ் உதவிநூலாக அமைகிறது. இதனை எமக்கு அறிமுகம் செய்த இந்து கலாசார அமைச்சைச் சேர்ந்த திரு. கோ. சேனாதிராஜா அவர்களுக்கு எமது நன்றி

**திருமதி. செ. கணநாதன்**
மலபார் வீதி
கம்பளை

★

ஒவ்வொரு மாதமும் இதழ் சிறப்புற்று விளங்குவது கண்டு மகிழ்கிறேன். உங்கள் சமயப்பணி சிறக்க இறைவன் அருள் புரிவானாக.

**கே. யோகமூர்த்தி**
பூணாகலை
பண்டாரவளை

★

எங்கள் தோட்டப் பகுதிகளுக்கும் உங்கள் இதழ் கிடைக்கிறது. இலங்கையிலுள்ள எல்லா ஆலயங்களும், இந்து சமய அமைப்புகளும் இந்நூலுக்கு ஆதரவு நல்கி ஊக்குவிக்க வேண்டும் என்பது எனது ஆவல்!

**க. மகேசுப்பிள்ளை**
சார்ணியா தோட்டம்
பதுளை

★

ஒரு வருடத்திற்குமேல் உங்கள் இதழுடன் தொடர்பு கொள்ள முடியாமல் போய்விட்டது. கடந்த இரண்டு இதழ்களும் கண்டு வியந்துபோனேன். மிக அருமையாக வளர்த்து விட்டிருக்கிறீர்கள். மனம் தளராமல் இந்தப் பணியை முன்னெடுத்துச் செல்லுங்கள்,
வாழ்த்துக்கள்!

**ந. சுந்தரமூர்த்தி**
கச்சாய் வீதி
சாவகச்சேரி

நாவலப்பிட்டியில்

# பாரதி விழா

கடந்த ஓரிரு ஆண்டுகளாக மலையகத்தின் பல்வேறு இடங்களிலும் தமிழ், சமய விழாக்கள் ஆங்காங்கு எழுந்தவாறு இருக்கின்றன. அதிலும் இந் நிகழ்வுகளில் இளைய சமுதாயம் பெரும் பங்கு கொண்டு சமூக நோக்கிலே சிந்திப்பதோடு, தாம் சார்ந்த சமூக மக்கள் வாழ்வில் நலன் பெருகவும் விழைகின்ற முயற்சிகள் எமக்கு மிகுந்த மகிழ்வு தருகின்றன.

கடந்த செப்டெம்பர் மாத இறுதியில் நாவலப்பிட்டி மலையக, ஆன்மீக, கலை இலக்கிய அபிவிருத்தி மன்றத்தினரால், கதிரேசன் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடாத்தப்பட்ட பாரதி விழா ஆதற்கு ஒரு சான்றாகும்.

மன்றம், விழாவுக்கு முன் நாவலப்பிட்டி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே பாரதி தொடர்பான கட்டுரை, பேச்சு, பாடல், ஓவியம் போன்ற போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்றோருக்கு விழா நாளன்று பரிசுகள் அளித்தது. விழாவிற்கு சிறப்பு அதிதியாக இந்து சமய கலாசார அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

விழா நினைவாக வெளியிடப்பட்டுள்ள சிறப்பிதழ் சாரல்நாடன், பேமன்கவி, கோ. சேனாதிராஜா, க. சுப்பிரமணியம், அட்டன் இரா. பரமேஸ்வரன் ஆகியோரின் பாரதி தொடர்பான கட்டுரைகளைக் கொண்டுள்ளது. சு வைத்திலிங்கத் பாரதி பற்றிய ஒரு கவிதையும் இடம்பெற்றுள்ளது.

ஆங்காங்கு பாரதியின் முதல் அச்சுக் கவிதை, பாரதி கையெழுத்தில் அமைந்த கவிதை, என்பன இடம்பெற்றுள்ளன. பாரதியின் வாழ்க்கை குறிப்புகளும், பாரதியை வாழ்த்தி சோவியத் நாட்டின் புகழ்பூத்த கவிஞர் அலதோலி பார்பரா எழுதிய கவிதையின் தமிழாக்கமும் இடம்பெற்றுள்ளன.

(தமிழாக்கம் - மலையக எழுத்தாளர் கே கணேஷ்)

மகாகவி பாரதி விருதுபெறும் எழுத்தாளர், அந்தனி ஜீவா அவர்களைப்பற்றி கே. பொன்னுத்துரை குறிப்புகள் தந்துள்ளார்

இராஜாங்க அமைச்சர், பி.பி. தேவராஜ் அஸீஸ் மன்றத் தலைவர் அஷ்ரப் அஸீஸ் ஆகியோர் ஆசிச் செய்திகள் தந்துள்ளனர்.

இலக்கிய ஆர்வத்தோடும் இலட்சிய தாகத்தோடும் இத்தகைய முயற்சிகளை மேற்கொள்ளும் மன்றச் செயலாளர் திரு. செல்வம் விஜயகுமார் அவர்களையும், மன்றத்தினரையும் மனமாரப் பாராட்டுகின்றோம்.

உங்கள் பணி வாழ்க!

— சங்கரன் புதல்வன்

## இந்து நிறுவனங்கள் சிறப்பாக....

(9ம் பக்க தொடர்ச்சி)

கூடி தீர்மானத்தை எடுக்கலாம். அவ்வாறு எடுக்கப்பட்ட தீர்மானம் ஏனைய பொது அங்கத்தினர்களினால் அல்லது பொது மக்களினால் அங்கீகரிக்கப்படுவது சிறப்பானதாகையினால் பொது மக்களின் அல்லது பொது அங்கத்தினரின் விருப்பத் தெரிவுக்கு விடப்படலாம். இதன் பின்னர் கொணரப்படும் எந்தவித ஏற்பாடும் மக்களின் பூரண ஒத்துழைப்பை பெறும் என்பதில் ஐயமில்லை. இவ்வாறானதொரு ஏற்பாடு அமுல் நடாத்துவதனால் கமிட்டி உறுப்பினர்கள் அல்லது சபை உறுப்பினர்கள் தங்களுக்கு இஷ்டப்பட்டதை செய்கிறார்கள் என்றோ அல்லது தான்தோன்றி தனமாக நடந்து கொள்கிறார்கள் என்றோ அல்லது பொது மக்களுக்கு மதிப்பளிக்க தவறிவிட்டார்களென்றோ அல்லது எடுத்த தீர்மானம் சரியானதல்ல என்றோ எழுப்பப்படும் கூக்குரலுக்கு இடமில்லாது பதிலாக எல்லோரிடத்திலிருந்தும் ஆதரவினை பெறக்கூடியதாகவிருக்கும்.

### கம்பனியை போன்ற இடைவிடாத செய்ற்பாடு

கம்பனி ஆரம்பிக்கப்பட்டதும் அக்கம்பனி இடைவிடாத செயற்பாட்டில் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறது. இந்து நிறுவனங்களை நோக்கும்போது எப்போதோ ஒரு நிகழ்ச்சியை நடாத்திவிட்டு உறங்கி விடுகின்றன. மீண்டும் எப்போதோ ஓர் நிகழ்ச்சி நடத்த முற்படும் போது உறங்கு நிலையில் இருந்து விழிப்பு நிலைக்கு கொண்டுவரப்படுகின்றன. இவ்வாறான ஒரு போக்கு வருந்தத்தக்கதாகும். இன்றைய சூழ்நிலையில் ஒவ்வொரு இந்து நிறுவனமும் மிகவும் விழிப்புணர்வும் இடைவிடாத செயற்பாடும் உடையதாக இருக்கவேண்டும். இந்து நிறுவனங்களின் இடைவிடாத செயற்பாட்டுக்கு அதிக உழைப்பும் நல்ல பொருளாதாரமும் அவசியமாகும். ஆயின், சிறப்பான, நன்கு திட்டமிடப்பட்ட திட்டங்களையும் ஆக்கிக்கொண்டதன் பின்னர் இடைவிடாத செயற்பாடு என்பது கைக்கு எட்டக்கூடிய தொன்றாகிவிடும். அவ்வாறான ஓர் நிலை ஏற்படின் அது இந்துமதத்தின் சிறப்பான வளர்ச்சிப் பாதைக்கு இட்டுச்செல்லும்.

---

## மனம் கெட்டால்.....

(8ம் பக்க தொடர்ச்சி)

அக்கினியின் ஒளியால் கவரப்பட்டு அதிலேயே மாண்டு மடிகின்ற விட்டில் பூச்சி போன்று உலக வாசனையால் தடிப்பேறிய அகங்காரமும் பேராசையும் அதற்குரியவரைச் சுட்டெரிக்கின்றன.

### உலகின் நிலை

கேடுகள் பூமியில் இருந்தும் வானத்தில் இருந்தும் உருக்கொள்வதில்லை அவைகள் மனித மலத்திலிருந்து சிருஷ்டிக்கப்படுகின்றன.

பேராசையும் சுயநலமும் கேடுகளை வளர்த்தெடுக்கின்றன.

இவ்விரு நீச குணங்களுடைய பராமரிப்பில் வளர்ந்து வருகின்ற உலகம் சர்வ நாசததிற்கு ஊர்ந்து செல்லக்கூடும்.

மிலேச்ச குணங்கள் கண்களைத் திசைமாறிப் பார்ப்பதற்குப் பழக்கி வைத்திருக்கின்றபடியால் அது நேரான மார்க்கத்தைப் பார்ப்பதற்குரிய ஒளியை இழந்து வருகின்றது.

ஜனங்களுடைய நல்ல சுபாவந்தான் உலக சேமத்தின் ஆதார பீஜம். இதை ஒவ்வொருவரும் திடமாகவே கருத்தில் ஊன்ற வேண்டும்.

மனிதர் கலங்கமற்ற நற்குண சீலராய் வாழ்ந்தால் கலகமும் கலக்கமும் இருக்க மாட்டா. எதார்த்தம் இவ்வாறிருக்கையில் வெவ்வேறு மார்க்கங்களில் யோக சேமங்களைத் தேடப் பார்ப்பது அர்த்தமற்றதாய் விடுகின்றது.

ஆத்மீக சிட்சணங்கள் சமய ஆசார அனுஷ்டானங்கள் எல்லாம் மனக் கசடுகளை உருக்கி மனிதர்களை நல்ல சுபாவ சுத்தியுடையவர்களாக்குவதற்கு உரிய உபாயங்களாகும்.

மனிதர் சர்வ சக்திகளையும் உபயோகித்து நற்குணங்களை விருத்தி செய்யவேண்டும்.

### உபத்திரவங்கள்

துர்க்குணம் உடையவர்கள் வாழுகின்ற இடங்களில் பெரும் உபத்திரவங்கள் நிகழ்கின்றன. இது தான் இன்றைய உலகநிலை.

மென்மேலும் மனக்கசடுகள்கள் வளர்ந்துகொண்டே போனால் மனிதனுக்கும் விஷக்கிருமிகளுக்கும் அதிக வித்தியாசமில்லாதுவிடும்.

நமது உணர்வு மாற்றத்திற்காகக் காலம் காத்து நிற்பதில்லை. இனியாவது மனிதர்கள், சமுதாயம் போய்க்கொண்டிருக்கும் பாதையைப் பற்றிச் சரியான அறிவுடையவர்களாகாவிட்டால் எதிர்காலம் அமங்கலகரமான பல சம்பவங்களால் பாதிக்கப்படும்.

மனிதருடைய துர்க்குணங்களே சாசுவதமான சுகத்திற்கும் சுதந்திரமான வளர்ச்சிக்கும் இடையூறாயிருக்கின்றன.

உலக சமுதாயத்தின் இரு பெருங் கண்களாகிய அரச தர்மமும் ஆத்மீக தர்மமும் அந்தரங்க சுத்தியுடன் சரியான இலட்சியத்தில் செயல்பட்டால் உயர்ந்த சீலமுடைய ஒரு மனித சமுதாயத்தை உருவாக்குவது சுலபமானதாகும்.

மனிதர் துர்க்குணங்களிலிருந்து முக்தராகுவது தான் உலக சமாதானத்திற்கும் மாயக் கலப்பில்லாத சாந்த மதுரமான வாழ்க்கைக்கும் ஏக மார்க்கம்.

# காவத்தைக்கு ஓர் இந்து ஆலயம் தேவை!



திரு. அ. பொன்னம்பலம்

இரத்தினபுரிக்கு அண்மையிலுள்ள ஒரு சிறு நகரம் காவத்தையாகும். இந்நகரினைச் சூழ தேயிலை இறப்பர் தோட்டங்கள் உள்ளன. இத்தோட்டங்களிலும், இந்நகரிலும் பெருமளவு இந்து மக்கள் வாழ்கின்றனர். ஆனால் இந்து மக்கள் வணங்கவென ஒரு ஆலயமில்லாதிருப்பது நீண்டநாட் குறையாகும்.

இப்பிரதேசத்தில் வாழும் இந்துப் பெருமக்கள் இது தொடர்பாக மிகுந்த வேதனை அடைந்துள்ளனர். பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் இதுவரை எதுவுமே கைகூடவில்லை. பல இன மக்கள் வாழும் இக்நகரில் இந்து ஆலயம் தவிர ஏனைய வணக்கத்தலங்கள் உள்ளன.

இங்கு ஆலயம் என ஒன்று இல்லாது இருப்பதனால் சமய அபிஷேகங்கள், பூஜைகள், கிரியைகள், திருமண வைபவங்கள் ஆகியவற்றை நடாத்திக் கொள்ள தூர இடங்களுக்கு அதிகம் பணத்தையும் நேரத்தையும் செலவு செய்து செல்லவேண்டிய சட்டாயம் காவத்தை வாழ் இந்து மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சிரமங்ககளைப் போக்க, ஆன்மீக ஈடுபாடுகளை பெருக்க ஒரு ஆலயம் தேவை - அதுவும் அவசியம் தேவை என்பதை நன்கு உணரவைத்துள்ளன. ஆதலின், காவத்தை வாழ் மக்களும், காவத்தையிலிருந்து வேறிடங்களுக்கு தொழில், உழைப்பு நிமித்தம் சென்றுள்ள இந்துப் பெரியோர்கள் தீவிரமாக சிந்தித்து ஒரு ஆலயம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது நல்லது.

இவ்விடயத்தில் இந்துசமய, கலாசார இராஜாங்க அமைச்சுடனும் தொடர்புகொண்டு ஆவன மேற்கொள்ளலாம்.

''கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்'' என்ற வாக்கை எண்ணிக்கொண்டு வருந்துவதைவிட செயற்படுவது மேலானதல்லவா!

# 'தரமான ஓர் ஆன்மீக இதழ் இந்து' கலாசாரம்'

## நீலகாமம் தோட்டத்தில் அமைச்சர் திரு. பி. டி. தேவராஜ்

"நலைநகரிலிருந்து இரண்டு ஆண்டுகள் தவறாது தொடர்து வெளிவரும் ஓர் ஆன்மீக இதழ் இந்து கலாசாரம். உண்மையில், இந்து மக்கள் இத்தகைய நன்முயற்சிகளுக்கு தாராளமான மனதோடு ஊக்கமளிக்க வேண்டும்''

இவ்வாறு அண்மையில், காவத்தை நீலகாமம் தோட்டத்தில் காவத்தை இந்து மாமன்ற அமைப்பாளர்கள், பிரதேச பாடசாலை அதிபர்கள், மாணவர்கள் கலந்துகொண்ட கூட்டத்திற் பேசிய இ/ச, இ/க, இ/அ பி. பி. தேவராஜ் குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில்:

''சமயம், சமய விழாக்கள் பற்றிய செய்திகளோடு நல்ல பல தத்துவங்கள் நிறைந்த கட்டுரைகளையும் கொண்டுள்ள இவ்விதழ், தோட்டப் பகுதிகளில் நன்கு அறிமுகமாக வேண்டும். அப்போது தான் மலையக இந்து மக்களை தாம் வணங்கும் வணக்க முறைகளின் அர்த்தங்களைக் கூட நன்கு புறிந்துகொள்வார்கள். ஆங்காங்குள்ள இந்து மன்றங்கள், பாடசாலைகளின் இந்து மன்றங்கள் என்பன இவ்விதழை வாங்கி ஊக்கமளிப்பது மிகவும் அவசியமாகும். இத்தகைய செயற்பாடுகளை ஊக்குவிப்பது இந்துக்களின் கடமையுமாகும்'' எனவும் குறிப்பிட்டார்.

(செய்தி -

அ. பொன்னம்பலம்(

## இராமலிங்க வள்ளலார்

(5ம் பக்க தொடர்ச்சி)

நெறிக்கு இடையூர் வராது விலகி நின்றார்கள். அடிகளார் மெய்ஞ்ஞானபாராதலின் ஞானசாரியாரை அடியற்ற மரம்போல் அவ்வருட் குருவை விழ்ந்து வணங்கினார். அருட்குருவும், நயனதிட்சை, வாசக திட்சை, மானசதீட்சைகளை முறையே அடிகளாருக்கு புரிந்தருளினார். வள்ளலார் மனுமுறைகண்ட வாசகம் என்பதை எழுதித் திருவொற்றியூர்த் தியாகராய பெருமானை உள்ளக்கிழியினுருவில் எழுதிப் போற்றி வந்தார். சீர்காழி, திருவாரூர், திருச்செங்காட்டங்குடி, திருப்புகலூர் முதலிய சிவனுறை தலம் பல தரிசித்துவிட்டு தமது பிறப்பிடமாகிய மருதூரையடுத்த கருங்குழிக்கு வந்து சிவத்தியான சமாதி நிலையில் இருந்து வந்தார்.

இவரது பாடல்கள் கனிவு, நல்லிசை, செம்பொருள், சுவை எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவை. இவர் அருளிய பாக்களுக்கு 'திருவருட்பாத் திருமுறை'' என்று கூறுவர். இவரது சீடராகிய தொழுவூர் திருவேலாயுத முதலியார் 5 திருமுறைகளாகவும், திரு சுப்பராயச் செட்டியார் 6-வது திருமுறை ''திருவருட்பா'' என்று பெயரிட்டு வெளியிட்டார். போலியருட்பா மறுப்பும் வெளிவந்தது. அதற்குக் கண்டனங்களும் பிறந்தன. இது சம்பந்தமாக அடிகளார் நீதிமன்றத்தில் வழக்கை எதிர் நோக்க வேண்டியாயிற்று. இறைவன் திருவருளால் எதிர்ப்பும், கண்டனங்களும் சூரியனைக் கண்ட பனிபோல் மறைந்தொழிந்தன.

வள்ளலார் உலகெலாம் என்ற திருவாக்கிற்கு அரியதோர் விரிவுரை வரைந்துள்ளார். வடலூர் என்ற பார்வதி புரத்திற்கு தமது 45-ம் வயதான பிரபல வருஷம் வைகாசி மாதம் 11-ம் திகதி குருவாரம் சிதம்பரதீஷதர் ஒருவரைக் கொண்டு பூசை செய்வித்து சத்திய தருமசாலை, சத்திய ஞானசபை, சன்மார்க்க சங்கத் திருக்கோயில் என்பன அமைக்கும் வைபவத்தில் வந்த பக்தகோடி மக்கள் 16 ஆயிரம் பேருக்கு மூன்று நாள் அடிகளாரே முன்னின்று அமுதளித்தார். அருட்பெருஞ்சோதி என்னும் ஆசிரியப்பாவை வரைந்தார். தம்மைக் காண வரும் அனைவரையும் ''புலை, கொலை, பொய், காமம், நீர்த்துச் சுத்த சன்மார்க்க நெறி நிற்கப் பணிப்பார்.

வடலூருக்கு ''உத்திர ஞான சிதம்பரம்'' என்று பெயரிட்டார். பின்பு அவர் ஐந்து அவத்தைகளைக் கடந்து தத்துவ முழுவதும் இச்சை வழி பணிக்கேட்டப் பிரணவமே திருவுருவாகச் சகசவருள் பொழிய வடலூரையடுத்து மேட்டுக்குப்பம் கிராமத்தில் சித்திவளாகத் திருமாளிகையில் ஸ்ரீமுக வருஷம் தை மாதம் சுக்கிரவாரம் புனர்பூச நட்சத்திரத்தில் சின்மாத்திர சகச சமாதியில் அசை வற நின்று தமது ஆன்மார்த்த சற்குருவைத் தியானம் செய்து தாம் இருந்த அறையைப் பூட்டச் செய்து தமது இந்திரியக் கதவுகளை அடைத்து மௌனநிட்டை கூடி நித்தியானந்தப் பெரும்பேறு பெற்றார். தைப்பூச நாளில் இன்னும் சோதி தரிசனம் நடந்து வருகிறது. அன்ன தானமும் அடிகளார் விருப்பப்படி நடந்துவருகிறது. வள்ளலார் அவர்களைப் புகைப்படம் எடுக்க எத்தனையோ முறைகள் முயன்றும் முடியவில்லை. காரணம் சித்தரின் திருமேனி ஒளி முழுதூடுருவலானது (Transparent) எனவே படம் பிடிக்க முடியாது. அடிகளார் நிழல் பூமியிலே விழாது. இவர் திரேகத்திலிருந்து வீசுகின்ற கதிரியக்கம் எதிர் வருபவரை தாக்கத்தினின்றும் தடுக்க, தான் வெள்ளைத் துணியால் சதா தன்னைப் போர்த்திக் கொண்டே இருப்பார்.

வாழ்க வள்ளலார்!

---

## கடலிலே கலைவடிவம்....

(7ம் பக்க தொடர்ச்சி)

அத்துடன், இந்துசமயத் திணைக்களத்தின் கலாசார அலுவலர் திரு. மாத்தளை வடிவேலன், வடமேல் மாகாண கலை கலாசார ஒன்றியத் தலைவர் திரு. ஏ. கனகரத்தினம் போன்றோரை தமக்கு அளிக்கும் ஊக்கத்தை நன்றியோடு நினைவு கூருகின்றார்.

இவர் தம் கனவு நனவாகவும், கண்டவுடனேயே கைகூப்ப வைக்கின்ற ஆலயங்களை, தனது கற்பனையாலும், கைவண்ணத்தாலும் ஆக்கித்தருகின்ற இந்தக் கலைஞரின் அருட்பணி சிறக்கவும் வாழ்த்துகின்றோம்.

— சங்கரன்புதல்வன்

---

## பொன் மொழி

உள்ளொன்று புறமொன்று இல்லாது இருந்தால் அன்றி கடவுளை அறிந்துணர முடியாது. கோணல் புத்தி உடையவரிடமிருந்து கடவுள் வெகு தொலைவிலேயே இருக்கிறார்.

— சுவாமி இராமகிருஷ்ணர்

# இராமகிருஷ்ணரும் — விவேகானந்தரும்

பேராசிரியர்: சோ. சத்தியசிலன்

இலங்கை இந்திய சமுதாயப் பேரவையின் அழைப்பின் பேரில் அண்மையில் இலங்கை வந்திருந்த திருச்சி உருமு தனலட்சுமி கல்லூரி முதல்வரும் சிறந்த சொற்பொழிவாளருமான பேராசிரியர் சோ. சத்தியசிலன் அவர்கள், கடந்த அக்டோபர் 26-ம் திகதி மாலை வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் ஆற்றிய உரையின் போது பின்வருமாறு கூறினார்:

சுவாமி இராமகிருஷ்ணரும், சுவாமி விவேகானந்தரும் இந்து மதத்தின் தொன்மையையும், உண்மையையும் உலகிற்கு உணர்த்திவைக்கப் பிறந்த இரு ஞானியர், மன்னுயிரெல்லாம் தன்னுயிராகக் கருதி அனைத்துயிர்களிலும் இறைவனைக் கண்டு, தொண்டு புரியவும், அன்புகாட்டவும் ஒரு மாபெரும் இயக்கத்தையே உலகுக்கு காட்டிவைத்த பெருமை இவ்விரு ஞானியர்க்கும் உரியதாகும்.

ஒருவர் இறைவனைக் காணத் துடித்தவர். மற்றவர் இறைவனைக் காட்டத் துடித்தவர். இராமகிருஷ்ணர் கடவுளை காணக் கடுந்தவம் புரிந்தார். பசியோடும் பட்டினியோடும், இரவு பகல் கருதாது இறைகாட்சி காண ஏங்கினார். இறுதியாக இறையருள் கிடைத்தது. அதன்பின் வெவ்வேறு மதங்கள் கூறும் நெறிகளின் வாயிலாக பகவத் தரிசனம் பெற்று, இறை இன்பத்திலே இலயித்துக் கிடந்தார். இங்ஙனம் தான் சுயமாக பெற்ற அநுபவத்தையே ''யாவரும் நாடிச் செல்வது ஒரே கடவுளையே என நான் கண்டுகொண்டேன்'' என உரைத்தார் இராமகிருஷ்ணர்.

கடவுளைக் கண்டவரிடம், கடவுளை தனக்குக் காட்டுமாறு வந்த இளைஞர் நரேந்திரன் என்ற சுவாமி விவேகாநந்தர். அவர் தமது குருவிடம் பெற்ற ஆன்மீக அநுபவங்கள் மூலம் பரந்த இந்த உலகிற்கு இந்தியாவின் செய்திகளை பரப்பினார். பலமே வாழ்வு என்றும் பலமின்மேயே மரணம் என்றும் உணர்த்தி வைத்தார். இந்தியா மூட நம்பிக்கைகளாலும், சடங்கு சம்பிரதாயங்களாலும் தாழ்ந்ததன்று, வேதச் செல்வங்களாலும், ஆன்மீகச் சிறப்பினால் உலகிற்கே வழிகாட்டும் உன்னத நாடு என உரைத்தார்.

மக்கள் பணியே இறைவன் பணி என்று இவ்விரு ஞானியரும் உணர்த்தி வைத்தனர். ஒரு மனிதனுக்கு உதவுவதற்காக இருபதாயிரம் தடவை பிறவிகள் எடுக்க நேரினும் எடுக்கச் சித்தமாக இருக்க வேண்டுமென தன்னலமற்ற தொண்டுக்காக தம்மை அர்ப்பணித்தனர். ஒவ்வொரு இந்துவும் தன்னலமற்று பிறநலம் கருதி கடமை செய்யவும், மகிழ்வு காணவும் விழைந்தனர். எழ்மை, வறுமை, பலவீனம், பயம் போன்ற துன்பங்கள் மனிதனாக உருவாக்கிக் கொண்டவை. அவற்றை துச்சமெனக் கருதி மனித சமூகம் நன்மை பெற உழைப்பது ஒவ்வொரு இளைஞனின் கடமையும் என்று கருதினர்.

அவர்கள் ஆக்கிவைத்த ஆன்மீகப் பொறி இன்று இராமகிருஷ்ண மடங்கள் என்ற பெயரிலே உலகெங்கும் பரவியுள்ளது. தொண்டுக்கே தம்மை அர்ப்பணிக்கும் துறவியர் கூட்டம் அரும் பணிகளை ஆற்றுகின்றது.

கருணையும், இரக்கமும், பரிவும், பாசமும் காட்டும் அன்னையாக சுவாமி இராமகிருஷ்ணரையும், கண்டிப்பும், நல்லறிவும், தலைமைத்துவமும் காட்டுகின்ற தந்தையாக சுவாமி விவேகாநந்தரையும் நாம் காணுகின்றோம். இந்த அன்னையும் தந்தையும் எங்கள் இரண்டு கைகளையும் இறுகப் பற்றிக் கொண்டு ஆன்மீக நல்வாழ்வுக்கு இட்டுச்செல்கின்ற தெய்வீகப் பெற்றோராக நாம் கற்பனை செய்து அவர்கள் காட்டிய வாழ்வில் வாழுவோமாயின் இன்பம் பிறக்கும் அகிலம் மகிழும் ஆன்மீகம் தழைக்கும்.

தொகுப்பு: — அன்புச் செல்வன்

---

# பொன் மொழிகள்

எவ்விதக் கடமையும் இழிவானதன்று. இயற்றும் கடமைகளின் இயல்பைக் கொண்டு ஒரு மனிதனை மதித்தல் கூடாது. இயற்றும் முறையைக் கொண்டு மதிப்பிடுக. இயன்ற அளவு மிகச் சுருங்கிய காலத்தில் உறுதியும் அழகும் நிறைந்த ஒரு ஜோடிச் செருப்புகளை உருவாக்கும் ஒரு தொழிலாளியின் தொழிலையும் பொறுப்புணர்வையும் கருதும்போது ஒவ்வொரு நாளும் பிதற்றும் ஒரு பேராசிரியனை விடவும் அவன் மேலோனாவான். உண்மையில் ஒவ்வொரு கடமையும் தூயதே. கடமையில் மனமொத்த ஈடுபாடு என்பதும் கடவுள் வழிபாடு என்பதும் ஒன்றுதான்.

— சுவாமி விவேகாநந்தர்

# இராஜகோபுர வரலாறு

பல்வேறு இனமத மக்களின் எழில்மிகு புனித வணக்க ஸ்தலங்களை தன்னகத்தே கொண்டு மிளிரு வதுதான், கொழும்பு மாநகரின் மத்தியில் அமைந் துள்ள கொம்பனித்தெருப்பகுதியாகும்.

இப்பகுதியில், ஸ்ரீவள்ளி தேவசேனா சமேதர ராய் அமர்ந்திருந்து அருள் ஆட்சிபுரியும் அருள்மிகு சிவசுப்பிரமணியப் பெருமானின், இவ் ஆலயத்தை 1887-ம் ஆண்டில் கட்டிய பெருமை. புகழ்பூத்த ஸ்ரீ அருணாசலம் பொன்னம்பலம் முதலியார் அவர் களையும் பின்னர் 1902-ம் ஆண்டில் இவ் ஆலயத்தை பெரிதாகக் கட்டிய பெருமை பெரியார் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களையுமே சாரும்.

காலத்திற்கு காலம் புதுப் பொலிவுற்று மிளிரும் இவ் ஆலயத்திற்கு, அழகுறு இராஜகோபுரம் அமைக் பணியினை முன்னைய நிர்வாகத்தினர் பலமுறை மேற்கொண்டும், ஈற்றில் 1984-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18 ந் திகதி ஆலயசட்டவிதிகளுக்கு அமைய இளைப்பாறிய உயர்நீதிமன்ற நீதியரசர் திரு. வீ. சிவசுப்பிரமணியம் அவர்களது தலைமையில் நடந் தேறிய பொதுக்கூட்டத்தில், தங்களது நம்பிக்கைக் கும் நாணயத்திற்கும் பாத்திரமாக ஏகமனதாக தெரிவு செய்யப்பட்ட இன்றைய ஆலயதர்மகர்த்தா சபையினராலேயே இப்புண்ணிய கைங்கரியம் பயன் அளித்துள்ளது. இப்பயன்தரும் பணிக்கு வித்திட்ட எமது ஆலய அறங்காவலர்சபைத் தலைவராய் இருந்து அமரத்துவம் அடைந்த திரு. வேலுப்பிள்ளை சண்முகம் அவர்களின் பெரும்பணி என்றும் நின்று உலவும்.

பல இன்னலுக்கும் இடர்களுக்கும் இடையில் இன்றைய ஆலயதர்மகர்த்தாக்கள், இவ் இராஜ கோபுர திருப்பணியை நிறைவுபெறச் செய்யும் வகை யில், தகுதியும் தன்னடக்கமும் கொண்ட ஓர் இராஜ கோபுர திருப்பணிச்சபையை தெரிவு செய்து இப் பணியை அவர்களிடம் கையளித்தனர். இத்திருப் பணிச் சபைக்கு உதவியாக ஆலய தர்மகர்த்தாக்கள் அடங்கிய நிறைவேற்றுக் குழு ஒன்றினையும் ஆலோ சனைச் சபை ஒன்றினையும், கடல் கடந்த நாடுக ளில் 'இராஜ கோபுர திருப்பணிச் சபை U.K.', இராஜ கோபுர திருப்பணிச் சபை U.S.A. ஆகிய வற்றினையும் உருவாக்கி திறம்பட செயலாற்ற வழி வகுத்தனர்.

## பணிவான வேண்டுகோள்

பல்வேறு வேலைப்பளு காரணமாகவும் நேர மின்மையாலும் இதுவரை பல பெருமக்களை நிதி உதவி கோரி நாங்கள் நேரில் சந்திக் முடியாமற் போனதையிட்டு மிகவும் மனம் வருந்துகின்றோம். இத்திருப்பணி நிறைவு பெற ஏறத்தாள 25 லட்சம் ரூபாய்வரை இன்னும் எமக்கு தேவைப்படுகின்றது. தயவு கூர்ந்து தங்கள் பங்களிப்பினை நல்கி இம் மாபெரும் பணி நிறைவு பெற உதவும் வண்ணம் பணிவன்புடன் வேண்டுகின்றோம்.

சேரவாரும் ஜெகத்திரே! சேர்ந்து இந்த நற்பணிக்கு பொருள் தருவீர்!! அருள் பெறுவீர்!!!

நன்றி - வணக்கம்

பணிவுள்ள

க. பாலசுப்பிரமணியம்
கௌரவ செயலாளர்
ஆலய தர்மகர்த்தா சபை
இராஜ கோபுர திருப்பணிச் சபை

131, கியூ வீதி,
கொழும்பு 2
தொலைபேசி: 432225
04-03-1991

### இராஜகோபுர திருப்பணிச் சபை

திரு. சின்னத்துரை தனபாலா J.P.
(இராஜகோபுர திருப்பணிச்சபைத் தலைவர்)

திரு. G. நாராயணசாமி
(இராஜகோபுர திருப்பணிச்சபை துணைத் தலைவர்)

திரு. சோ. சிவப்பிரகாசம்
(ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர்)

திரு. இ. நவரட்ணம்
திரு K. ரங்கநாதன் F.C.A.
(இராஜகோபுர திருப்பணிச் சபை கௌரவ இணைப்பொருளாளர்)

திரு. M. இராமசாமி
(ஆலய தர்மகர்த்தா சபை பொருளாளர்)

திரு. M மகேந்திரன்
(ஆலய தர்மகர்த்தா சபை நிர்வாக தர்மகர்த்தா)

திரு. A. கந்தசாமி
(ஆலய தர்மகர்த்தா சபை சொத்துரிமைத் தர்மகர்த்தா)

திரு. S T. செல்லத்துரை
(ஆலய தர்மகர்த்தா சபை அங்கத்தவ தர்மகர்த்தா)





தமிழ்நாடு திருச்சி உருமு தனலட்சுமி கல்லூரியின் பேராசிரியர் திரு. சோ. சத்தியசீலன் அவர்கள் அண்மையில் இலங்கை வந்திருந்தபோது கும்பனித்தெரு அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோவிலில் நமது இந்து கலாசாரத்தின் சார்பாக பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டார். அதுசமயம் பேராசிரியர் ''கலியுகவரதன்'' என்னும் பொருள் பற்றி சொற்பொழிவு நிகழ்த்துவதை மேலேயுள்ள படத்திலும், பேராசிரியர் இலங்கை வந்ததும் இந்து கலாசாரத்தின் காப்பாளர்களில் ஒருவரான திரு. ஆர். விஜயபாலன் அவர்கள் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் மலர் மாலை சூட்டி வரவேற்பதை கீழேயுள்ள படத்திலும் காணலாம்.

## இந்து கலாசாரம் மலர் வெளியீடு

(12 பக்கத் தொடர்ச்சி)

நடந்து கொள்வர் எனவே சமயப் பத்திரிகைகளும் நூல்களும் சைவ சமய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைய வேண்டும் என்று கூறி, இந்து கலாசார இரண்டாம் ஆண்டு நிறைவு மலரை வெளியிட்டு வைத்தார். முதல் பிரதியை ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி கோவில் அறங்காவலர் சபைத் தலைவர் சிவத்திரு வ. டி. வி. தேவநாயகம் பிள்ளை அவர்கள் 2001/- கொடுத்து பெற்றுக்கொண்டார்.

சைவ முன்னேற்றச் சங்கத் தலைவர் திரு. சி. தனபாலா ஜே. பி. பேலியாகொடை ஸ்ரீ பூபால விநாயகர் கோவில் அறங்காவலர் சபைத் தலைவர் திரு. தி. செந்தில்வேல் இந்து மாமன்றத்தின் பொதுச் செயலாளர் திரு. கே. நீலகண்டன், விவேகானந்த சபை பொதுச் செயலாளர் திரு. இராஜ புவனேஸ்வரன் ஜே. பி. திரு. தெ. ஈஸ்வரன், ரேணுகா இன்டஸ்ரீஸ் அதிபர் திரு. யு. நடராஜன் மற்றும் ஏராளமானவர்கள் அன்பளிப்புகளை வழங்கி பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.

திரு. இராஜபுவனேஸ்வரன் ஜே.பி. திரு. தி. செந்தில்வேல் திரு. நீலகண்டன், திரு. தனபாலா ஜே.பி., சைவ முன்னேற்றச் சங்க பொதுச் செயலாளர் திரு. கே. பாலசுப்ரமணியம் மற்றும் பலரும் இந்து கலாசாரம் ஆற்றிவரும் பெரும் பணியை பாராட்டிப் பேசினார்கள்.

இறுதியாக இறைபுகழ் நீதிராஜ சர்மா குழுவினரின் இசைக் கச்சேரி நடைபெற்றது. இதழாசிரியர் திரு. ஏ. எம். துரைசாமி எல்லோருக்கும் நன்றி கூறினார்.

# ஆத்மஜோதி முத்தையா பற்றிய வரலாற்று நூல்

ஆத்மீக வள்ளலெனப் போற்றப்படும் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் வாழ்க்கை வரலாற்றினை நூலாக ஆக்கி வெளியிடும் பெரும் பணியை ஆற்ற ஏழாலை ஸ்ரீ பாதாள ஞான வைரவ ஆலய பரிபாலன சபையும், இந்து இளைஞர் மன்றம் முன் வந்துள்ளன.

நாடறிந்த ஆன்மீகச் சான்றோரான ஆத்மஜோதி முத்தையா அவர்கள், தமது வாழ்வை சமயப் பணிக்கே அர்ப்பணித்தவர். நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக மலையகத்தின் நாவலப்பிட்டி எனும் நகரிலிருந்து, மலையக மக்களுக்கென ஆன்மீக அறிவைப் பாய்ச்சியவர். பல ஞானச் சான்றோர்களை இலங்கைக்கு அழைத்துவந்த போதெல்லாம் மலையகத்தின் பல பாகங்களுக்கும் அழைத்துச் சென்று அவர் தம் அருளாசி கிடைக்க வழி சமைத்தவர்.

இந்தியா, மலேசியா, சிங்கப்பூர் இந்தோனேசியா போன்ற நாடுகளுக்கும், அந்நாடுகளின் அழைப்பின் பேரில் சென்று ஆன்மீகச் சொற்பொழிவுகளை ஆற்றிய பெருந்தகை. பல ஆன்மீகப் பெரியோரின் அருளையும் ஆசியையும் பெற்றவர். ரமணமகரிஷி, சத்திய சாயி பாபா, சுத்தானந்த பாரதியார் போன்றோர் முத்தையா அவர்களுக்கு தமது ஆசீர்வாதங்களை நல்கி வாழ்த்தினர்.

தற்போது யாழ்ப்பாணம் சாவகச்சேரியில் வாழும் முத்தையா அவர்களின் 74-ம் ஆண்டு ஜெயந்தி விழா, இவ்வருடம் மே மாதம் 27-ம் திகதி நல்லை ஆதீனத்தில் கொண்டாடப்பட்ட போது இவர்காலத்திலேயே இவரது வரலாற்றை வெளியிட வேண்டுமென அறிஞர்கள் முன்வந்தனர். இந்நூல் தொடர்பான மேலும் விபரங்களை செயலாளர் த. தருமலிங்கம், ஸ்ரீ பாதாள ஞான வைரவர் ஆலய பரிபாலன சபை ஏழாலை எனும் விலாசத்துடன் தொடர்பு கொண்டு அறியலாம் என சபை அறிவிக்கின்றது.

— அன்புச் செல்வன்

# சிரமதசையில் ஒரு சிவனடியார்



சுவாமி நடராஜானந்தா

பண்டாரவளை, பூணாகலை எனும் இடத்தில், கடந்த ஐந்து வருடங்களுக்கு மேல் மிகவும் அமைதியாக ஆன்மீகப் பணி செய்து வருகின்றார் சுவாமி நடராஜானந்தா அவர்கள்.

நுவரெலியாவில் உயர் குடும்பமொன்றில் பிறந்து, முன்பு இராணுவத்தில் பணிசெய்த சுவாமி அவர்கள் சமயப் பணிக்கே தம்மை அர்ப்பணித்து துறவு வாழ்வை மேற்கொண்டவர்.

தற்போது எவ்வித ஸ்தாபன ரீதியான அமைப்புகளும் இன்றி, மிகவும் சிரமதசையில் மேற்படி தோட்டத்தில் சுவாமி அவர்கள் வாழ்கின்றமை இந்துப் பெருமக்களுக்கு மிகவும் வேதனை தரும் செய்தி ஆகும்.

எனவே, இந்து அமைப்புகள் ஆன்மீக நெறியாளரான சுவாமி அவர்களை ஆதரித்துப் போற்றுவதை தமது கடமையாகக் கொண்டு அவரது சிரமங்களை குறைக்க முன்வரவேண்டும்.

''வாழ்க சீர் அடியாரெல்லாம்'' என்று நாம் மனதளவிலும், செயலளவிலும் வாழ்த்துவோமாயின், இறைவனின் அன்புக்கு பாத்திரமாவோமல்லவா!

செய்தி:

க. யோகமூர்த்தி
பூணாகலை - பண்டாரவளை

## மாணவர் மன்றம்

# இந்து சமயத்தில் குருகுலக் கல்வி முறை

இந்து சமயம் கல்விக்கு மிக முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கின்றது. ஆரம்ப காலங்களில் மாணவர்கள் குருவை தேடிச் சென்று அவருக்கு பணிவிடை செய்து, அவரின் அறிவுரைபோல நடந்து அவரின் ஆசியையும் அறிவையும் பெறுவர். ராமர் குலகுருவான வசிட்டரை நாடிச்சென்று பணிவிடை செய்து வில்வித்தைகளை கற்றுக் கொண்டனர் என்று இராமாயணம் கூறுகிறது. குருகுல கல்வியில் மிக முக்கியமானது குருவின் அருட்பார்வை பெறுவதாகும். இவ்வாறு குருவின் அருட்பார்வையை பெறும் மாணவர் நற்பண்புகளையும், இறக்க உணர்வுகளையும், விசேட திறமையையும் பெறுவர். இராமர், ஸ்ரீ கிருஷ்ணன் ஏகலைவன் என்போரின் வரலாற்றை நோக்குகையில் மேற்சொன்ன விடயங்கள் எந்தளவு உண்மை என்பது புலனாகிறது.

மேற்கூறப்பட்ட மாணவர் அந்தணராக அல்லது அரசனாக இருப்பினும் கூட குருவை நாடிச்செல்ல வேண்டும். இவ்வாறு நாடிச்செல்லும் போதுதான் குருவுக்கு மதிப்பளிக்கவும், அவரின் அறிவுரைகளையும், அவரின் அருட்பார்வையும் பெற முடிகிறது. இவ்வாறு குருவின் ஆசிர்வாதம் கிடைப்பது கடவுளைக் கண்டதற்கு சமமானதாகும். இவ்வாறான கல்வி முறையைதான் இந்து சமயம் தோற்றுவித்திருந்தது.

ஆனால் இன்றைய நிலையில் குருகுலக் கல்வி எங்கு நடைபெறுகிறது? இன்றைய நவீன காலத்தில் குருகுல கல்வி மாற்றியமைக்கப்பட்டு குறிப்பிட்ட மண்டபத்தில் அல்லது கட்டிடத்தில் மாணவர்களுக்கு ஆசிரியர் என்று கூறப்படும். குருவினால் பாடம் கற்பிக்கப்படுகிறது. பணிவிடை செய்வதோ, குருவின் அருட்பார்வையை பெறுவதோ இன்று நடைமுறையில் காணமுடியாத விடயமாகும். இதனால் தான் இன்றைய மாணவர்கள் ஆசிரியரை மதிக்காமை, பாடத்தில் போதிய திறமையை வெளிப்படுத்தாமை, தீய பழக்கங்களில் ஈடுபடல், பெற்றோரை மதிக்காமை, நற்பண்புகள் இல்லாமை என்பவற்றை இலகுவாக நடைமுறைப்படுத்த கூடியவர்களாக உள்ளனர்.

ஆகவே இந்து சமயம் அன்றே மாணவர்களை நற்பிரஜைகளாக உருவாக்குவதற்காக குருகுல கல்வி முறையினை ஏற்படுத்தி நல்வழி காட்டியது. இன்றைய பக்கம் இந்து சமய தாற்பரியத்தையும் அதன் மாண்பையும் கொஞ்சமும் அறிந்துக் கொள்ளாமல் இருந்துவிடுகின்றனர். எவ்வாறெனினும் ஆசிரியர்களான குருவிற்கு பணிவிடை செய்யாது விடினும் குருவின் சொற்படி நடந்து அவரின் நல்லாசிகளைப் பெறுதல் இன்றைய மாணவர்களின் கடமையாகும்.

ரா. செந்தில்வாகன்
வகுப்பு 13
சில்வஸ்டர் கல்லூரி - கண்டி

### முருக வழிபாடு

முருக வழிபாடு தமிழ் மக்களிடையே தொன்று தொட்டு வழங்கி வருகிறது. முருகு என்பது இளமை, இனிமை அழகு என்று பல கருத்துக்கள் உண்டு.

முருகனுக்குரிய விரதங்கள் கார்த்திகை விரதம் கந்த சஷ்டி விரதம் என்பனவாகும். கார்த்திகை விரதம் கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நட்சத்திரத்தன்று அனுட்டிக்கப்படுகிறது. சஷ்டி விரதம் ஐப்பசி மாதத்தில் அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல் சஷ்டி ஈறாக ஆறு தினங்கள் அனுட்டிக்கப்படும்.

முருகனுக்கு ஆறுபடை வீடுகள் உள்ளது. அவை பழனி, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருத்தணிகை என்பனவாகும். முருகனுக்கு ஞானபண்டிதன், கந்தன், கலியுகவரதன், என்று பல பெயர்கள் உண்டு. இலங்கையில் கதிர்காமம் மாவிட்டபுரம், நல்லூர் ஆகிய முருக கோயில்கள் உள்ளன. முருகனது திவ்விய சரிதம் கூறும் நூல் கந்தபுராணம் ஆகும். முருகனது ஆயுதம் வேல் ஆகும். வேல் வேல் முருகா வெற்றி வேல் முருகா என்று நாமும் வணங்குவோமாக.

P. தீபவாணி
Year 8 D
கொ/விவேகானந்தா கல்லூரி

### எனது பாடசாலை

எனது பாடசாலையின் பெயர் விவேகானந்தா மகா வித்தியாலயம். இப்பாடசாலை கொட்டாஞ்சேனை புதுசெட்டித் தெருவில் அமைந்துள்ளது. பாடசாலை அதிபரின் பெயர் திரு. எஸ். தில்லைநாதன். எனது பாடசாலையில் ஓர் சிற்றுண்டிசாலையும் ஓர் சிறிய பிள்ளையார் கோவிலும் உண்டு.

இப்பாடசாலையில் சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட ஆசிரிய ஆசிரியைகள் கல்வி கற்பிக்கின்றனர். எனது பாடசாலையில் நடனம், சங்கீதம் போன்ற பாடங்கள் கற்பிக்கின்றனர்.

எனது பாடசாலையில் மூன்று இல்லங்கள் உண்டு. அவை நாவலர் இல்லம், இராமநாதன் இல்லம், விபுலானந்தர் இல்லம் போன்றவையாகும். இப்பாடசாலையில் மூன்று கட்டடங்கள் உண்டு. பாடசாலைக்கு அருகில் பெரியதோர் தொழிற்சாலை உண்டு.

எனது பாடசாலை சூழல் மிக அழகாகவும் சுத்தமாகவும் இருக்கும். இங்கு 2500க்கு மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.

பி. ரேணுகா
ஆண்டு (5-C)

# இதற்கொரு விதி செய்வோம்

## (நவகதை)

— துஷாந்தினி —

கொட்டும் மழையிலும், உயிர் கொல்லும் பனியிலும் தோட்டத் தொழிலாளர் பாதி விடியு முன்னே துயில் எழுந்து பணி செய்யும் பால் மரக் காடு அது!

காலம் காலமாக கண்ணீர் வடித்து நாட்டினது வளத்தினை ஓங்கிடச் செய்து நல்ல பெரு வருவாயைத் தேடித்தரும் அந்த பால்மரத் தோட்டம் ஏனோ ஒரு ஒதுக்குப் புறமாக, சமுதாயத்தை கிழித்து பட்டை நாமம் தீட்டியது போல் அமைந்துள்ள தார்ப்பாதைகளின் தரிசனம் கிடைக்காமல் தூரம் தூரமாக மலைகளுக்குப் பின்னே மண் மாதாவின் குழந்தையாக மறைந்து கிடக்கின்றது.

சுற்றிவர பால் மரக்காடு — தூரத்தே ஒரு சிறிய நாடு. மற்றபடி அது ஒரு சாம்ராஜ்யம்தான். தோட்டத்தின் உச்சியில் கம்பீரமாக காட்சியளிக்கும் ஒரு தனிக் குன்றில் ஒரு முருகன் ஆலயம்.

குன்றில் குடியிருக்கும் குறிஞ்சிக் குமரனின் அருளுக்கோ அளவில்லை. காலதேவனின் கால ஓட்டம் இந்த தோட்டத்தையும் அரவணைக்கத் தவறியதில்லை.

ஏழு தடவைகள் திக்குளித்துக்கொண்டது யமுனைக் கரையில் கோபியரின் துயிலைக் கவர்ந்து விளையாடிய கண்ணன் பாஞ்சாலிக்கு துச்சாதனன் மலைத்து விழ மலை மலையாக வழங்கியதுபோல், கல்லாய் கிடந்த அகலியை திருப்பாதத்தினால் பெண்ணாக்கியது போல்.

இறைவனின் பெருங் கருணையால் மீண்டும் எங்கும் சாந்தி! சமாதானம்!

அந்த தோட்டத்திலும் முகிழ்த்தது சாந்தி சமாதானம்!

தோட்டத்து இளைஞர்கள் உச்சி முருகன் கோயிலில் கூடி சர்வ மதத் தலைவர்களையும் அழைத்து வந்தார்கள்.

கருணையே வடிவான பாதிரியார் தூய வெண்புறாவாக வந்து ஆராதனை செய்து ஆசீர்வதித்ததுடன் இருண்டலயன்களுக்குச் சென்று துன்பப்படுகின்றவர்கள் நோயாளிகள் அனைவருக்குமாக ஜெபம் செய்து வேண்டிக்கொண்டு புறப்பட்டு தேவாலயம் சென்றார்.

சமாதானத்தையொட்டி சாந்தி வேண்டி ஆலயத்திலிருந்து வந்த அர்ச்சகர் யாகம் ஒன்று நடத்தினார்.

வேள்விப் பொருட்களின் பட்டியல் நீண்டதாக மிக நீண்டதாக இருந்தது.

அது ஒரு தோட்டத் தொழிலாளியின் பல மாத சம்பளத்திற்கு ஈடாகாது!

அர்ச்சகரை அனுப்பிவைக்கும் போது தட்சணையில் தகராறு ஏற்பட்டு விட்டது.

அவரை மீண்டும் நகருக்கு கொண்டு செல்ல கூட்டத்தை முன்னின்று நடத்தியவர் கார் செலவுக்காக மனைவியின் காதை அலங்கரித்த தோட்டை வட்டிக் கடையில் வைக்க வேண்டியதாகிவிட்டது.

சாந்தி சமாதானத்திற்காக முன்னின்று சர்வ மத பிரார்த்தனை நடத்திய அந்த ஏழைத் தொழிலாளியின் வீட்டில்

சிறு பூகம்பம்

வட்டிக் கடையில் அக்கினிப் பிரவேசம் செய்துள்ள தங்கத் தோட்டை எப்போது திருப்பி மனைவியின் காதில் போடுவான்!

அதுவரை அந்த வீட்டில் அமைதி இல்லை.

இப்போது மண்மாதாவின் மடியின் ஒரு மூலையில் தனியாக இருந்த அந்த தோட்டத்திற்கு கருணை ததும்பும் அந்த பாதிரியார் தூய வெண்புறா போல் அடிக்கடி சென்று ஆராதனை செய்கின்றார்.

தோட்டத்தில் சிலர் வெகு தூரம் என்றும் பாராது நகரிலுள்ள அந்த மாதா கோயிலுக்குச் சென்று வருகின்றனர்.

(யாவும் கற்பனை)

# இந்து சமய மாணவர்களின்
## அவலநிலையை போக்கவேண்டும்

கொள்ளுப்பிட்டி ஹட்சன் ரோட்டிலுள்ள மெத்தடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் 1981-ம் ஆண்டு மே மாதம் 1-ம் திகதி கொள்ளுப்பிட்டி வாழ் இந்துப் பெருமக்களும், இந்து சமயப் பெரியார்களும் ஒன்றுகூடி இந்து சமய மறுமலர்ச்சிக்கு வித்திட்டனர். முதற்படியாக மெத்தடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் இந்துசமய வகுப்பை ஆரம்பிப்பதென்று முடிவு செய்து பாடசாலை அதிபர் மூலம் கல்வி இலாகாவின் அனுமதியைக் கோரினர். கல்வி இலாகாவும் அனுமதி கொடுத்தது.

சுற்றுலா கிராமிய கைத்தொழில் அமைச்சர் மாண்புமிகு எஸ். தொண்டமான் அவர்கள் தலைமை தாங்க இந்து சமய வகுப்பு மேற்படி பாடசாலையில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

1981-ம் ஆண்டு முதல் 1985-ம் ஆண்டுவரை கொள்ளுப்பிட்டி இந்து கலாசார மன்றம் பொறுப்பேற்று சமய வகுப்பு, தமிழ் வகுப்பு, திருக்குறள் வகுப்பு முதலியவற்றுடன் நாடகம், கலாசார நிகழ்ச்சிகளும் நவராத்திரி விழா, திருவெம்பாவை பஜனை ஊர்வலங்கள், சிவராத்திரி, தமிழர் திருநாளாம் பொங்கல் விழாவும் சிறப்புற நடத்தி வந்தனர். அதிபருடன் ஏற்பட்ட மதமாற்ற தகராறினால் இடையில் இவை நிறுத்தப்பட்டன.

பாடசாலையின் சரித்திரத்திலேயே முதல் தடவையாக பாடசாலை மாணவர்களின் இல்ல விளையாட்டு போட்டி பிஷப் கல்லூரி மைதானத்தில் மெத்தடிஸ்த பெண்கள் கல்லூரி அதிபர் திருமதி பீரிஸ் தலைமையில் நடைபெற்றது மாணவர்களுக்கு கேடயமும் சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்பட்டன. பாடசாலையல் இடவசதி குறைவாக இருந்ததால் மாண்புமிகு இராஜாங்க அமைச்சர் திரு. எம். எஸ். செல்லச்சாமி அவர்கள் மூலம் மேல் மாகாண மாவட்ட சபையினரைக் கொண்டு புதிய கட்டடம் ஒன்றும் போட்டுக் கொடுத்தோம். ஆண்டு தோறும் சில வகுப்பறைகளை திந்தை பூசி பராமரித்து வந்தோம். MAINTENANCE BY HINDU CU TURAL S CIETY என்ற பெயர்ப் பலகையும் தொங்கவிடப்பட்டிருந்தது. இந்து கலாசார மன்ற உறுப்பினர்கள் இவர் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தில் உறுப்பினர்களாக இருந்தனர். பெற்றோர் ஆசிரியர் தின விழாவுக்கு ஆண்டுதோறும் அரிசி மூடைகள், தேங்காய்கள் மற்றும் மரக்கறி வகைகள் அன்பளிப்பு செய்தோம். மொத்தமாக சொல்வதென்றால் ரூபாய் 20,000/-க்கு மேல் இந்து கலாசார மன்றம் செலவு செய்துள்ளது. இதன் முழு விபரமறிய விரும்புவோர் ''இந்து கலாசார மன்றமும் - மெத்தடிஸ்த அரசினர் தமிழ் கலவன் பாடசாலையும்'' என்ற பிரசுரத்தை படித்துப் பார்க்கலாம்.

நாங்கள் இடை நிறுத்தம் செய்த பணியை இந்து கலாசார முத்தமிழ் மன்றம் இந்து அறநெறிப் பாடசாலை என்ற பெயரில் கடந்த ஐந்து வருடங்களாக ஞாயிறு சமய வகுப்புகளை திறம்பட நடத்தி வருகையில் புதிதாக மேற்படி பாடசாலைக்கு வந்த அதிபர் இந்து சமய வகுப்புகளுக்கு தடை விதித்திருப்பதாக மேற்படி மன்றத்தினர் மே. த. ஜனாதிபதிக்கு முறையிட்டுள்ளனர். இதன் விபரங்களை பிறிதோர் பக்கத்தில் நாம் பிரசுரித்துள்ள கடிதத்திலிருந்து அறியலாம். இந்த பாடசாலையில் இப்போது மாத்திரமல்ல ஏற்கனவேயும் மதமாற்ற கெடுபிடிகள் நடந்துள்ளன. இந்து சமயத்தைச் சேர்ந்த பெரும்பான்மை பிள்ளைகள் படிக்கும் ஒரு பாடசாலையில் கிறிஸ்தவர் ஒருவர் அதிபராய் இருப்பதால் ஏற்படும் விபரீதம் இது என்றே எண்ணுகிறோம். மே. த. ஜனாதிபதி அவர்கள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் அவலநிலையை போக்கவேண்டுமென மிகவும் தாழ்மையாய் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இந்து கலாசார மன்றம்
கொள்ளுப்பிட்டி

---

### இந்து அதிபர் வேண்டும்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

12. மாணிக்கவாசக நாயனார் குருபூசையை 14-7-91 அன்று நடாத்துவதற்கு அனுமதி வழங்கியபின் எதுவித முன்னறிவிப்பும் இல்லாமல் பெற்றோர் ஆசிரியர் சங்கக் கூட்டம் ஞாயிறு அறநெறிப் பாடசாலை வேளையில் நடைபெறவிருப்பதாகக் கூறி மேற்படி பூசையை நடத்தமுடியாதபடி தடுத்தனர்.
13. 27 7-91 அன்று சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசையை நடாத்துவதற்கு அனுமதி அதிபரிடம் மருந்து வழங்கப்பட்டபோதும் குருபூசை நடத்த அனுமதிக்கப்படவில்லை.
14. 7-10-91ல் கௌரவ இராஜாங்க கல்வியமைச்சருக்கு இவ்விடயம் தொடர்பாக கலந்தாலோசிப்பதற்கு அனுமதி கேட்டு தந்தி மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தோம். ஆனால் அதற்கு எவ்வித பதிலும் எங்களுக்கு வரவில்லை. அதேநேரம் அதிபரினால் அறநெறி வகுப்பை நிறுத்துமாறு கட்டளை 18-10-91 அன்று விடப்பட்டது. இந் நடவடிக்கை மேல்மாகாண கல்விப் பணிப்பாளரின் பணிப்பின் பேரில் அதிபர் செயற்படுவதாகக் கூறினார்.

எங்களது நீதியான இந்த கோரிக்கைகளை தங்கள் மேலான கவனத்திற்கு கொண்டுவருகிறோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கி எங்கள் இந்து அறநெறிப் பாடசாலையை தொடர்ந்து நடத்த அனுமதி கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் பணிவுள்ள

எஸ். சிவசாமி, தலைவர்
ஏ. எஸ். புனிதசேகரன், செயலாளர்

கொள்ளுப்பிட்டி ஞாயிறு இந்து அறநெறிப் பாடசாலை, இந்து கலாசார முத்தமிழ் மன்றம்
265/15, காலி வீதி
கொழும்பு-3

*With Best Compliments*

*of*

# RENUKA INDUSTRIES

**IMPORTERS & EXPORTERS**

MANUFACTURERS OF ALL KINDS OF

## ALUMINIUM WARES

**170-172, OLD MOOR STREET, COLOMBO 12.**

TELEPHONE: **435579**

*With Best Compliments*

*of*

**RIKEN TIRE**

# JAILAKMI STORES

HEAD OFFICE:

**91-A, Maliban Street, Colombo 11.**
**Telephone: 26149, 541329**
**Cable: "JAYEXPORT"**
**Telex: 22744 JLSI CE**
**Fax: 587240**

BRANCH:

**153, Union Place,**
**Colombo 2,**
**Tel: 548547, 547741**



இப்பத்திரிகை கொழும்பு இந்துகலாசார மன்றத்திற்காக கொள்ளுப்பிட்டி, நெல்சன் ஒழுங்கை 39/23ம் இலக்க இல்லத்தில் வசிப்பவரும் இதன் ஆசிரியருமான திரு. ஏ. எம். துரைசாமி, என்பவரால், கொழும்பு-13 149-பி ஜெம்பட்டா வீதி, ஒஸ்கா எண்டர்பிரைஸஸில் 29-10-1991ல அச்சிட்டு வெளியிடப்பட்டது.